VASANTHAM Tamil Monthly 2-4 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

இளைஞர் சிறப்பிதழ்

மாத இதழ்

AR-RABAE

ஆகஸ்ட் ௨௦௦8

வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்!

August 2008



# இளைஞர்கள்
## புரட்சிகர சமூகத்தின் விழிகள்!

- உமது மதநம்பிக்கையும் நடைமுறைவாழ்வும் எப்படி?
- உமது கனவுகள் கைகொடுக்கின்றதா..? காற்றில் பறக்கின்றதா..?
- தயவுகாட்டா தனிமைகளில் உமது இதயங்கள் தவிக்கின்றதா..?

IPC
ISLAM PRESENTATION COMMITTEE


ஆணாயினும் பெண்ணாயினும் சரி,
எவர் இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல்
புரிகின்றாரோ, அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம்.
(மறுமையிலும்) அத்தகையோர்க்கு அவர்களின் உன்னதமான செயல்களுக்கு
ஏற்ப நாம் கூலி வழங்குவொம்!
سورة الكهف آية 97
-திருக்குர்ஆன் 18:97


VASANTHAM Tamil Monthly 2-4 ملحق مجلة البشرى باللغة التاميلية مجلة الربيع

# வசந்தம்

இளைஞர் சிறப்பிதழ்

மாத இதழ்

வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!




VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
AUGUST 2008
ஆகஸ்ட் 2008
மலர் ௨ இதழ் ௪

CHIEF PATRON
*தலைமைப் புரவலர்*
Mohd. Ismail Al-Ansari

EDITOR
*ஆசிரியர்*
M.A. Abdul Musavir

EDITORIAL BOARD
N.M.M. Hussain
Ameer Hasan Nainar
Faizal Muhammad
Muhammad Jabir
Farzana Rafeeq
Zinoofa Ansar

DESIGN
*வண்ண உருவரைபடம்*
Noushad Zainulabdeen
IT Section-IPC

PUBLISH
*வெளியீடு*
IPC
KUWAIT

CONTACTS
*தொடர்புக்கு*
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT

DIAL
2447526, 2444117 Extn: 208

FAX
2400057
Attn: IPC—VASANTHAM

e-MAIL
amusavir@gmail.com

WEBSITE
www.ipc-kw.com

# இந்த இதழில்..!

*ஆசிரியரிடமிருந்து...!*
நவவிடியலின் இலட்சியப் பரிமாணம்
இளைய சமூகம் 3

*சிறப்புக் கட்டுரை*
இளைஞனே விழித்தெழு..! 4

18
*ஆளுமை*
இளமையின் வசந்தம்!

*கவிதை*
ஓ..., இளைஞனே..! 5

*முகப்புக் கட்டுரை*
இளைஞர்கள்
புரட்சிகர சமூகத்தின்
விழிகள்! 6

2 *வாசகர் சுகந்தங்கள்*
ஔடதமாய் அறிவுச்
சுகமளிக்கும் வசந்தம்

10 *IPC வழித்தடங்கள்*
விழாக்கள், நிகழ்வுகள்

12 *தோழமை*
இளைய சமூகமே..!
உன் தோழமை யாரோடு?

13 *தொடர்*
பெரும்பான்மை மதங்களில்
இறை பற்றிய
கருத்தோட்டம்

14 *தொடர்*
நான் திருக் குர்ஆன்
பேசுகின்றேன்

15 *தொடர்*
மார்க்க
விழுமியங்கள்

16 *வரலாறு*
இலட்சிய இளைய சமூகம்
சமுதாயத்தின் இணையிலாப் பொக்கிஷம்!

17 *சாதனையாளர்கள்*
சரித்திர
கல்வெட்டுக்கள்!

18 *அழைப்பு*
இளமையின் பங்களிப்பு
அழைப்பின் உயிர்த்துடிப்பு

20
*போட்டி*
அறிவுக் குறுக்கெழுத்து-4














- بريد الربيع - كلمة العدد - تحديات العصر الحديث من الشباب
- أيها الشباب ( أبيات) - الالتزام لدى الشباب - أنشطة اللجنة
- حامل المسك - تصور الإله في الديانات الشهيرة - القرآن يتكلم
- بنيان الإسلام - إنهم فتية - الهمة العالية منذ الصغر -الشباب و الدعوة





# ஔடதமாய் அறிவுச் சுகமளிக்கும் வசந்தம்!







ஜூலை '08 மாத வசந்தம் கண்டேன். ஆட்சியைக் காப்பாற்ற, சந்ததிகளை ஆடம்பரத்தில் திளைக்கச் செய்ய...என்று அனைத்துவிதங்களிலும் ஊழலை வளர்க்கும் அரசியல்வாதிகள் சமூகத்தின் விகாரமான கோர முகங்கள். அன்றைய ஆட்சியாளரையும் இன்றைய அரசியல்வாதியையும் முன்னிறுத்தி விளக்கிய ஆசிரியர் பக்க கட்டுரை ஒவ்வொரு ஊழல் அரசியல்வாதிக்கும் தர்ம அடி. கடந்த மாதம் இந்திய பாராளுமன்றத்தில் ஆட்சி பிடிக்க, கவிழ்க்க அரசியல் கட்சிகள் ஊழல் பேர நாடகங்கள் நடத்திய வேளையில் இந்த தலையங்கம் வெளிவந்தது சாலப் பொருத்தம்!

இராஜ்குமார்
தஞ்சை-தமிழகம்
ஹஸாவி-குவைத்

ஜூலை மாத வசந்தம் கண்டேன். இன்றைய தினத்தில் தேவையான கூட்டாண்மை வாழ்வு, அல்லாஹ்வின் கயிற்றை அனைவரும் இறுகப் பற்றிக் கொண்டால் மட்டுமே சாத்தியமாகும் என்பதை ஐயத்துக்கிடமின்றி நிரூபித்திருக்கின்றார் கட்டுரையாசிரியர். விருந்தினர்பக்க ஆக்கங்கள் நல்ல போதனைகள். அவதூறுகளின் அனர்த்தங்கள் சர்வசாதாரணமாகிவிட்ட இக்காலங்களில் அவதூறு பரப்புவோர் அதுபற்றி சிந்தித்து திருந்தினால் எவ்வளவு நலம்! ஒட்டகத்தின் வியத்தகு படைப்பு பற்றிய கட்டுரை மற்றும் இஸ்லாம் குறித்த தப்தபஈ அவர்களின் தொடர் அருமை!

முஹம்மத் ரஃபீக்
கள்ளக்குறிச்சி-தமிழகம்
ஸுப்ஹான்-குவைத்



ஜூன் '08 மாத வசந்தம் கண்டேன். முகப்புக் கட்டுரை – போதைப் பாதாளத்தில்...! மக்கள் மனத்தில் நன்கு பதிந்து நல்வழி வாழ வகை செய்யும். சிந்தித்து செயல்பட வைக்கும் விதத்தில் சொற்களை வடிக்கும் கட்டுரை ஆசிரியர்க்கு பாராட்டுக்கள். துன்பத்தில் கரம் நீட்டும் இறைவனை இன்பத்தில் மறக்கலாமா? சுபிட்சம் தேடி ..ஸினூபா அன்ஸார் தொடர் அனைத்தும் மனத்தில் ஆழப் பதிந்தது.

முஹம்மத் அமீன் (அபுமாஹின்)
அம்பகரத்தூர்-புதுச்சேரி
சால்மியா-குவைத்

ஜூன் மாத வசந்தம் கண்டேன். ஒவ்வொரு பக்கமும் என் நெஞ்சை தொட்டது. வசந்தத்தை நல்ல முறையில் தொகுத்து, வடிவமைத்து பலரையும் நல்வழிப்படுத்தும் IPC நிறுவனத்துக்கும், ஆசிரியருக்கும் நன்றி கலந்த பாராட்டுக்கள்!



முத்து என்கின்ற ஷாஹுல் ஹமீத்
பரங்கிப்பேட்டை-தமிழகம்
சால்மியா-குவைத்

ஜூன் மாத வசந்தம் கண்டேன். தேரையும் கடலையும் இணைத்து – மனித வலிமையையும் இறைநியதியையும் அழகாக விளங்க வைத்தது பின் அட்டை போதனை! வசந்தம் கண்டதும் நான் புரட்டுவது பின் அட்டையைத்தான். ஆயிரம் பக்கங்கள் சொல்ல வேண்டியதை நச்-சென்று அழகாக சில வரிகளில் சொல்வது வசந்தத்துக்கே உரிய பாணி!

பிரேம் ஆனந்த்
தமிழகம் - இந்தியா
ஸுப்ஹான்-குவைத்

ஜூன் மாத வசந்த ஆக்கங்கள் அருமை! குறிப்பாக, ஸினூபா அன்ஸார் அவர்களின் சுபிட்சம் தேடி..! இதயத்தை தொடுவதாக அமைந்தது. இன்பத்தில் இறைவனை மறக்கலாமா? நல்ல ஆக்கம்! சத்தியநெறியில் சங்கமித்த சகோதரி ஷர்மிளா (இந்திராணி)-யின் ரங்கல்பமான 'இஸ்லாத்தை ஏற்றதையே பெரும் செல்வமாகக் கருதுகின்றேன்- எனும் வார்த்தை, இறையச்சமிருந்தும் இம்மை வாழ்விற்காக பெரும்பகுதி நேரத்தை தொலைக்கும் என் போன்றோர்க்கு சம்மட்டி அடியாகும். முஸ்லிம்கள் படிப்பினை பெற வேண்டிய பொன்னெழுத்துக்கள் அவை! வசந்தம் பரவலாக அனைத்து இடங்களிலும் கிடைக்கப் பெற்றால் நலம் விளையும்.

முகவை அப்பாஸ்
முகவை-தமிழகம்
அம்காரா-குவைத்

வசந்தத்தை ஒரு வருடம் சிறப்பாக எல்லோர் வாழ்விலும் ஒளிக்காய் ஏற்றித் தந்த அனைவர்க்கும் நன்றி! குவைத்தில் இந்த தமிழ் மாத இதழ் கண்டு குதூகலித்தோர் பலர் உண்டு. வசந்த வளர்ச்சிக்கும் அருந்தொண்டுக்கும் பிரார்த்திக்கின்றேன்.

நூருல் ஹிபா
புதுவை
சால்மியா-குவைத்



வசந்தம் முதலாண்டு சிறப்பிதழ் கண்களை குளிர வைத்தது. மனதை நிறைவு செய்தது. அன்னையர் தினம்-தாயே!, செல்வத்தின் மாயையா? மார்க்கத்தின் மேன்மையா?.... அனைத்து கட்டுரைகளும் அருமை தொடர்ந்து வசந்த பணி சிறக்க என் முதலாண்டு வாழ்த்துக்கள். போதையின் பாதகத்தை விளக்கிய விதம் அருமை. இளைய சமுதாயமும், இந்த தொழில் புரிவோரும் சிந்தித்து திருந்த வேண்டும். உலகெங்கும் சட்டங்கள் இன்னும் கடுமையாக்கப்பட வேண்டும்.

முஹம்மத் அமீன் (அபுமாஹின்)
அம்பகரத்தூர்-புதுச்சேரி
சால்மியா-குவைத்

வசந்தமே!
நீ சுமந்து வரும்
அனைத்து அம்சங்களும்
அருமை......!
வாழ்க்கை வழிகாட்டி......!!
மணம் பரப்பட்டும்,
மனம் நிரம்பட்டும்!
என்றும் வாழ்த்துக்கள்!

M.R. நுஸ்ருல் பாத்திமா
கண்டி -இலங்கை
முஷ்ரிஃப்-குவைத்

அறிவியல் மணம் கமழும் வசந்தம்
ஆன்மிக சிந்தனைச் சோலையாம் வசந்தம்
இறைத்தாகம் மேலோங்கச் செய்வது வசந்தம்
ஈச்சமரத்தின் உவமையாய் உலவும் வசந்தம்
உண்மைக்கு உயர்வு சேர்ப்பது வசந்தம்
ஊக்கத்துடன் மனம் விழிப்படைய செய்வது வசந்தம்
எம்மதத்தவரையும் கனிவுடன் காணும் வசந்தம்
ஏந்தல் பொன்மொழிகளை இலங்கச் செய்வது வசந்தம்
ஐயமின்றி உண்மையை உணர வைப்பது வசந்தம்
ஒற்றுமை உணர்வால் உள்ளத்தை ஈர்ப்பது வசந்தம்
ஓங்கும் இஸ்லாத்தை உணர்வில் உறைய வைப்பது வசந்தம்
ஔடதமாய் அறிவு சுகமளிப்பது வசந்தம்
அஃதே அனைவரையும் ஆரத்தழுவுவது வசந்தம்

படைப்புக்கள் அனைத்தும் பயனுள்ளவையாகவும், தென்றலில் மிதந்து வரும் மகரந்தமாயும் அமைகின்றன. வசந்தம் மென்மேலும் செழித்தோங்க, வல்ல இறைவன் அருள் புரிவானாக!

சிக்கந்தர் கான் சிதம்பரம்-தமிழகம் அல்-கஸ்ர்-குவைத்

வசந்தம் மாத இதழ் ஒரு வருடத்தை பூர்த்தி அடைந்ததையொட்டி,அதன் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஏராளமான வாழ்த்தோலைகள் இன்னும் வந்த வண்ணம் இருக்கின்றன. வசந்தத்தை வாழ்த்தி புத்துயிர் பூக்கச் செய்து கொண்டிருக்கும் அன்பர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள்!(ஆ-ர்)

# நவவிடியலின் இலட்சியப் பரிமாணம்...... இளைஞர் சமூகம்!



இளைஞர்கள்!

இவர்கள் சமூகத்தின் சக்தி, நவ விடியலின் தோற்றுவாய்! முயற்சிகளின் பரிமாணங்கள் அனைத்தையும் சுமக்கும் சுமைதாங்கிகள். அறிவுப் புதுமைகளும், செயல்களில் ஆளுமையும், கனவுகளில் கூட கம்பீரமும், உணர்வுகளின் உச்சமும் இவர்களுள் அடக்கம்.

ஒரு தேசத்தின் நற்திருப்புமுனை இயக்கி இவர்களின் கரம் பட்டு இயக்க வல்லது. அவ்வாறாயின் நற்பிரதிபலிப்புக்களின் மறுமலர்ச்சித்தூவலில் எல்லோர் மேனியும் சிலிர்க்கும்.உன்னத ஆக்கபூர்வ தாத்பர்யங்களை கர்ப்பந்தரித்திருக்கும் அவர்களின் இதயங்கள், இலட்சியங்களைப் பிரசவிக்கும்..!

உலகம் எப்போதும் இளைஞர் தேசம். தாராளமய உலகின் தவிர்க்க முடியாத முதல் தலைமுறையினரே இன்றைய இளைஞர்கள். ஒரு கிராமமாக சுருங்கிவிட்ட உலகில் கைகெட்டும், கேள்விப்பட்டிராத வசதிகளும்,வாசற்கதவை வந்து தட்டும் வாய்ப்புக்களும் குவிந்து கொண்டிருக்கும் நவீன யுகத்தில் வளர்ந்தவர்கள் இன்றைய யுவ – யுவதிகள். தமது பெற்றோரும் மூதாதையரும் கற்பனையில் கூட பார்த்திராத வசதிகளை அசாதாரணமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் அசகாய சூரர்கள் இவர்கள்..

கல்வி, வேலை,குடும்பம் என்று சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறை வாழ்வை முழுமையாக ஆட்கொண்டு விட்டதா? செல் போன்களில் செவித்து, ஐ - பேட்களில் நுனிப்புல் மேய்ந்து வலைதளங்களில் வளைய வந்து நவீன தொழில் நுட்பத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் தம் வாழ்வை எப்படி விளங்கச் செய்கிறார்கள்..

ஆம்!

வியப்பாக இருக்கிறது. அறிவின் அதிகபட்ச அமைப்பை தம்முள்ளே கொண்டிருக்கம் இளைய சமுகம் தமக்கு நல்லதோ கெட்டதோ செய்ய முடியாத, தான் வடித்த ஒன்றையே தன்னைக் காக்கும் கடவுளாகக் கருதிக் கொண்டிருக்கிறது. அதன் முன் சிரம்பணிந்து கொண்டிருக்கிறது. நாளொரு வசதிகளும் பொழுதொரு கண்டுபிடிப்பக்களுமாக இருக்கும் இளைய சமூகம் தன் உண்மைப் படைப்பாளனை கண்டுபிடிக்கத் தவறிக் கொண்டிருக்கிறது.

சற்றே சிந்தியுங்கள்!

உங்கள் புதிய முயற்சிகள் செயல் திட்டமாக வடிவமைக்கப்படுவதில் அந்நன்மை சமூகத்துக்கு சென்றடைவதில் உங்கள் வரைவுத்திட்டங்கள் வெறும் பேச்சளவில் நின்று விட்டால் எப்படி இருக்கும்? கோபம்தானே கொந்தளிக்கும்.

இந்தப்பேரண்டம் முழுவதையும் படைத்துப் பரிபாலிக்கும் வல்ல இறைவன் மனிதனின் சிந்தனையைத் தூண்டி செயலாக்கம் தரக்கூடிய ஒரு செயல் திட்டத்தை மனித குலத்துக்கு தந்திருக்கின்றான். அதனைப் படித்து சிந்திக்கவும் படிப்பினை பெறவும் வேண்டி..!அது மட்டுமே இன்றைய சமுகம் குறிப்பாக இளைய சமுகம் தீர்த்துக் கொள்ள இயலா பல்வேறு பிரச்சினைகளுக்கு சிக்கலில்லாத சீரிய தீர்வைத் தர முடியும்!

ஆம்,அது படைத்தவனால் வழங்கப்பட்ட இறுதிமுடிவுகள் தாங்கிய உறுதித்திட்டம். எம் வாழ்வின் இலட்சியங்கள் இலங்கவும் அதில் இதயங்கள் துலங்கவும் செய்யக்கூடிய ஜெயமான வரைவோவியம்.

அதுவே திருக்குர்ஆன் !இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மனிதகுலம் முழுவதற்குமாக இறக்கியருளப்பட்ட இந்த இறுதி வேதம் உங்கள் வெற்றிக்குக் கட்டியம் கூறுகின்றது!

## சுந்தர தேசத்தின் சுதந்தர வாசம்!

அதிகாரத்தின் கீழ் அடக்கப்பட்டு, அனைத்தும் முடக்கப்பட்டு, இந்தியாவின் அழகு சிறகுகள் உடைக்கப்பட்டு, ஆங்கிலேயரின் அடக்குமுறையில் கட்டுண்டு கிடந்தது அன்றைய நாட்களில். பின்.. 15.08.1947-இல் சுதந்தர சுந்தரத்துக்குள் இந்தியா சிறகடித்துப் பறந்து, தன் தேசத்து சுதந்தரத்தை உலகிற்கு பறைசாற்றியது.

ஆம்! இத்தினம் இந்தியாவின் சுதந்தர தினம். இன்றைய இந்தியா மாபெரும் மனித வளங்களையும், அறிவுஜீவிகளையும், நல்வளத் திட்டங்களையும் இரண்டறக் கலந்து, நவீன, நாகரிக நாடாகப் பரிணமித்துக் கொண்டிருக்கிறது.

பாரத மணித்திருநாட்டின் 61-ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்த சுபவேளையில் தமிழ் சகோதர-சகோதரிகளுக்கு சுதந்தர தின நல் வாழ்த்துக்கள். ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக எமது முன்னோர் நடத்திய மாபெரும் அறப்போராட்டத்தின் விளைவே இன்று நாம் சுவாசித்துக் கொண்டிருக்கும் சுதந்தர சுவாசக் காற்று! பல மொழிகள், பண்பாடுகள், மதங்கள் கொண்ட உலகின் மாபெரும் ஜனநாயக நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) காணும் நம் மக்கள் அந்த உண்மை இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள்.

ஆனால் அந்த உண்மை இறைவன் யார் என்பதை அடையாளம் காணாது மதத்தின்-சாதியின் பெயரால், இனத்தின்-குலத்தின் பெயரால், சண்டை சச்சரவுகள், கலவரங்கள், வகுப்பு மோதல்கள்.. இறைநம்பிக்கை மிக்க அதேவேளையில் இறைவனின் பெயரால் தமக்கிடையே ஓர் இடைவெளியை உருவாக்கிக் கொள்வது அந்த இறைவனுக்குப் பிடித்தமான ஒன்றா என்ன? ஒருபுறம் அமைதியை விரும்புபவன் என்று இறைவனை முன்னிறுத்தி விட்டு மறுபுறம் அதே இறைவனின் பெயரால் பரஸ்பரம் மோதிக் கொள்வதை அந்த இறைவன் விரும்புவானா, என்ன?

சகோதர – சகோதரிகளே! ஒரு தாய் வயிற்றில் நாம் பல்வேறு பிரிவினராக இருப்பது ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளவே அன்றி வெவ்வேறு இறைவனை சொல்லி பரஸ்பரம் இரத்த ஆறுகளை ஓடச் செய்வதற்காக அல்ல.. இதற்கெல்லாம் என்ன காரணம்? ஒரே இறை குடையின் கீழ்.. ஒரே இறைவன் வகுத்த நியதியின் கீழ்.. மனித குலம் ஒன்று பட்டு நிற்காததே!

வாருங்கள்..! அந்த ஏக இறையை அடையாளம் காண்போம். அவன் தந்த வாழ்க்கை நெறி நிழலில் குளிர் காய்வோம். எம் வீட்டை, நாட்டை வளமாக்குவோம்!

ஆசிரியர்
amusavir@gmail.com



இளைஞர் சிறப்பிதழ்

சிறப்புக் கட்டுரை

# இளைஞனே விழித்தெழு..!

வாழ்வின் கட்டிளம்பருவம், கடைசிகளின் நினைவுகளில்கூட களைத்தட்டும் பருவமாகும். அழகிய அப்பருவத்தில் அறிவு விதைகளை எங்கும் வீசி, நல்லுரங்களாக நற்செயல்களை நாட்டும்போது, வாழ்வின் எல்லைகளில்கூட நல்விருட்ச நிழல்களில் அமரலாம். இலட்சியத் தகிப்பும், துணிவுத்துடிப்பும், திடகாத்திரப் பார்வையும், தன்னகத்தே கொண்ட இளைஞர்கள் ஒரு சமூகத்தின் சிறந்த விற்பன்னர்கள்.

இளைஞர் என்பதன் பொருள் என்ன?? சூடேற்றப்பட்ட இரத்தத்தின் பெயராகும். புத்தம் புதியவற்றைக் கவர்ந்து கொள்ளும் ஆற்றலுக்குப் பெயராகும். மேலும் ஒரு பொருள் அது முயற்சி செய்து அடைய வேண்டிய ஒன்று என மனதில் தோன்றி விட்டால், அது நல்லதோ கெட்டதோ உயிரைக் கொடுத்தேனும் அதனை அடைந்துவிட நினைக்கும் ஒரு சக்திக்குப் பெயராகும். உதாரணத்துக்கு வாள் ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். இது போர் வீரனுக்கும் பயன்படுகிறது. கொள்ளைக்காரனுக்கும் பயன்படுகிறது. எனவே இளைஞர் என்பது ஒரு வலிமையின் பெயராகும். இக்காலத்தில் பரவிவரும் ஒழுக்கக்கேடுகளை மற்றவர்களை விட சீக்கிரம் இளைஞர்களே ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களே அவற்றை பரப்புவதிலும் மற்ற எவரையும் விட முதன்மை வகிக்கின்றனர் என்றால் இளைஞர்களுக்கு நன்மையே உருக்கொண்டவர்கள் என்று எவ்வாறு பெயர் சூட்ட முடியும்?

இதே போன்று இளைஞர்கள் தீமையே உருக்கொண்டவர்களுமல்லர். இது நன்மையானது தான் என்று ஒன்றைத் தெரிந்து கொண்டதும் அதில் மனநிறைவு அடைந்து விட்டால் அதற்காக வேண்டி உயிரையும் அர்ப்பணிக்கத் தயங்காத மாபெரும் ஆற்றலும் அவர்களுள் அமைந்துள்ளது.

எகிப்திய நாகரிகத்தை உற்று நோக்குங்கள். இன்றைய அமெரிக்கா, ஐரோப்பா நாகரிகத்துக்கு வேறுபட்டதாக இருக்கவில்லை.எகிப்தில் தோன்றிய யூஸுஃப் (அலை) அவர்கள் ஒரு இளைஞராக இருந்தார்கள். தமது ஒழுக்க வலிமையால், சீரிய அறிவாற்றலால், விவேகத்தின் வீரியத்தால் அரசு முழுவதும் தமது கைக்கு வந்துவிடும் அளவுக்கு அந்த நாகரிகத்தின் மீது பலத்த அடி கொடுத்தார்கள்.

அதே போன்று பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தை உற்று நோக்குங்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் அன்புத்தோழர்கள் சத்தியத்திற்காக உயிர்த்தியாகம் புரிவதில் ஈடு இணையற்று விளங்கினார்கள். அவர்கள் இளைஞர்களாகவே இருந்தனர். அவர்கள் எல்லோரும் 10-35 வயதிற்கிடைப்பட்டவராகவே இருந்தனர். இவர்கள் தம் கண்ணெதிரே தோற்றமளித்த “நெருப்புக்குண்டத்தில் எங்களைப் போட்டுப் பொசுக்குங்கள்” என்று அக்கிரமக்காரர்களைப் பார்த்து கூறக் கூடிய கொள்கைவாதிகளாக இருந்ததற்கு வரலாறு சாட்சி பகரும். இவர்கள் எவ்விதப் பயங்கரச் சூழ்நிலையிலும் தம் கொள்கையை விட்டுக் கொடுக்கவில்லை. எண்ணற்ற இன்னல்களை சந்தித்தனர். விதவிதமான அக்கிரமங்களுக்கு ஆட்பட்டனர். தம் கொள்கையை நிலைநிறுத்துவதற்காக வேண்டி பிறந்த நாட்டை விட்டுப் பிறிதொரு நாட்டுக்குச் செல்வதற்கு ஆயத்தமானார்கள்.

இவ்வாறான நிலையில் என்ன நேரிடும்? நமது நிலை என்னவாகும் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை.

இவர்களும் இளைஞர்கள்தாம்! இவர்களில் பருவம் அடைந்த பாவையரும் இளங்காளையரும் இருந்தனர். இறுதியில் இவர்கள் அனைவரும் தமது தீரமிக்க செயல்களால் இஸ்லாத்தின் கொடியைத் தாங்கிப் பிடித்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பெருந்துணையாய் நின்று இவர்கள் தோற்றுவித்த மாபெரும் புரட்சி பல நூற்றாண்டு காலம் வரை உலகில் நிலைத்து நின்று உலகிற்கு வழிகாட்டிற்று. ஏன் இன்னும் கூட வழிகாட்டிக்கொண்டிருக்கிறது. கடைசி வரை அதன் பிரதிபலிப்பு உலகில் இருந்து கொண்டே இருக்கும். இவையனைத்தும் அப்புண்ணிய சீலர்களின் அரிய தியாகங்களாலும் வீரமிக்க செயல்களாலும் நிகழ்ந்தவையன்றோ...!


இளைய சக்திகள் இணைந்தெழுந்தால் கனல்புரட்சியும் கணநேரத்தில் என்றாகிவிடும். சமூக நல்திட்டங்களை சுமூகப்படுத்தவும், திறமையான நடவடிக்கைகளை நிலைநாட்டவும், அறிவு மையங்களை உருவாக்கவும், இன்ன பிறவற்றுக்கும் இளைஞர்களின் அறிவுச் சேவைகள் இயங்கினால் மென்பனி விழும் அழகிய விடியலைபோல் எத்தினமும் சுபிட்ச தினமாகும் இப்பாரினிலே...! ■



எழுத்து



மௌலானா ஸையித் அபுல் அ:லா மௌதூதி





# ஓ..!
# இளைஞனே..!!

எழுத்து



ஸினூ.ஃபா
அன்ஸார்

இளைஞன் - அவன்
ஒரு தேசத்தின் சமூகக்கவசம்.
வரலாற்று வரை படங்களின் இதிகாச சுவாசம்.
ஒரு வசந்த யுகத்தின் வளம்

துணிவுப் புஜங்கள்
அவனின்- கனிவு நிஜங்கள்.
அவனைத் தாவும் அறிவுக் கணைகள்
நிதர்சன கற்செதுக்கல்கள்.

அவனின் பாதங்கள், முன்னேற்ற விகிதங்களை
எழுச்சி வேகத்தில் எட்டிப்பிடிக்கும்.
வான்முட்டும் இலட்சியங்களை – அவனது
முதுகு சுமக்கும்.

எக்கணங்களையும்
எக்கோணங்களிலும் நின்று
குறிப்பெடுக்கும்.

இலட்சிய ஓவியங்களைத் தீட்ட
உறுதிஉரம் கலந்து – அவன்
குருதி பிரவாகம் எடுக்கும்.

ஆனால் - இன்று

இளைஞனே!! மூடிய கரங்களுடன்
முத்திரை பதித்தாய் - நீ
முன்னூறு கனவுகளில்
முண்டியக்கின்றாய்!!

அறிவாகாயத்திற்குத் தாழ்ப்பாளிட்டு,
இமயம் தொடா
இலட்சியங்களை இயலாமைப்படுத்தி
இகபோகத்தில் இயைகின்றாய்!!

உன் திண்மைத் தலைப்புகளுக்கு
வெண்மையடித்து,
உன் எண்ணச் சுரங்கத்தை
வெறுமையாக்குகின்றாய்??

கற்பனையில் காதல் கொண்டு
பகற்பொழுதுகளை
பஞ்சு மெத்தையாக்கி
இரவுகளில் இரவல் வாங்குகின்றாய்??

சற்றேறில்....!
உன் பாதங்கள் பாரெங்கும் படரட்டும்,
கருக்கொள்ளும் மேகங்கள்
வானெங்கும் படர்வது போல்..

நற்பண்பாடுகளை
உன் தேசத்தின் பயிற்சிக்களங்களாக்கி
சத்திய சாசனங்களுக்கு
சமுதாயத்தில் கையெழுத்திடு!!

வேகத்துடன் விவேகத்தைப் பயிர் செய்து
துணிவுடன் பணிவு கலந்து
உன் - அறிவுச் சுகந்தம்
எங்கும் கமழட்டும்.

மாறாக,
இலட்சியங்களை ஏப்பம் விட்டு
எச்சில் இலைகளாக ஆக்கி விட்டு
பெற்றோர் தியாகங்களை பிச்சை பாத்திரமேந்தி
தெரு வீதியில் வலம்வர வார்த்து விடாதே!!

இன்பக் கனிகளைப்பிழிந்து
கிண்ணம் நிறைத்தது போதும்.
அகலக்கால் வைத்து
ஆதவனைப் பிளந்தெடுக்கக் கற்றுக் கொள்!!

நல்லறிவுத் தூறல்களை
இலட்சியப் பெருவெள்ளமாக்கி,
இனிய வாழ்வை இங்கிதம் கொண்டமைத்து
இருமை வாழ்வையும இதம் கொள்ளச் செய்வாய்!!!



எழுத்து

மு.அ. அப்துல் முஸவ்விர்

# இளைஞர்கள் புரட்சிகர சமூகத்தின் விழிகள்



**86%**
இளைஞர்கள் அனைத்து மதங்களுக்கும் பொதுவான சிவில் சட்டம் சரிவராது என்கின்றனர்

பலத்த புயலிலும் கனத்த வெயிலிலும் தாங்களின் இலட்சியங்களை இலங்கச் செய்வதில் பெரும் புரட்சி செய்யும் பருவம் இளைஞர் பருவம்! ஒரு சமூகத்தின் சதுப்புத்தரைகளை இவர்கள் சரித்திரப் பளிங்குகளாக்கலாம்! ஆங்காங்கு காணப்படும் மேடுபள்ளங்களை சமப்படுத்தலாம், சரிநிகர்படுத்தலாம். சிதறிக்காணப்படும் சிலதின் சீராக்கம் இவர்களின் ஊக்கத்தின் உள்ளடக்கம்! ஆம்! மொத்தத்தில் இவர்கள் குருதியுடன் உறுதி கலந்த கட்டிளம் காளையர்கள்.

வளர்ந்து வரும் நவீனயுகத்தின் அச்சாணிகள் இவர்கள்! உலகின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்களாக இருக்கும் இவர்கள் வலிமை கொண்ட இளம் புஜங்கள்! வாழ்வின் உன்னத வசதிகளுக்காக பிறந்த மண்ணை விட்டு ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தாலும், பெரும்பாலான நேரத்தை குடும்பத்துடன் செலவிடவே விரும்புகின்றார்கள். சுற்றி வளைத்து பேசி சமாளிப்பது போய் இவர்களிடம் வெளிப்படையான தன்மையும் நெத்தியடி பதில்களும்தான் நிரம்பிக் கிடக்கின்றன.

பிறந்த மண்ணைவிட்டு வாழ்வாதாரம் தேடி குவைத் வந்திருக்கும் தமிழ் இளைய சமூகம், தங்களுக்குத் தேவையானதை அடைந்து கொண்டதா? அவர்களுடைய கனவுகள் வாழ்வில் முன்னேற கைகொடுக்கின்றதா? தயவுகாட்டாத தனிமைச் சிறைகள் அவர்களின் இதயங்களை தவிப்பில் ஆழ்த்துகின்றதா? இத்தகைய பல்வேறு வினாக்கள் குறித்து அவர்களின் மனநிலை என்ன என்பதை அறிய குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குவைத் வாழ் தமிழ் இளைஞர்-இளைஞிகளிடையே ஓர் கருத்துக் கணிப்பு மேற்கொண்டது “வசந்தம்” ஆசிரியர் குழாம்!

பல்லாயிரக்கணக்கான இந்திய-இலங்கை தமிழ் மக்கள் வாழும் இந்நாட்டில் அவர்களில் குறைந்தபட்சம் 50%-க்கும் மேற்பட்டவர்கள் 38 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கின்றனர். இவர்களில், ஏறக்குறைய 546 பேரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த கருத்தாய்வு கணிப்பீடு 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போன்றதல்ல! ஆயினும் கருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்களின் குறிப்பிட்ட மனநிலையை அது பிரதிபலித்தது என்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

தங்கள் இலட்சியக்கனவு இன்னும் நிறைவேறவில்லை என்றே பெரும்பாலான இளைஞர்கள் எண்ணினாலும் 93% பேர் இனி நிச்சயம் நிறைவேறும் என்கின்றார்கள். பட்டதாரிகளில் 95% பேர் தங்கள் கனவு நிறைவேறிவிட்டது என்கின்றார்கள்.

இவற்றில் கடன்

**உங்கள் மதத்தை எப்படிப் பின்பற்றுகின்றீர்கள் ?**

**59%**
அறிந்தும் பு



அடைத்தல்,குடும்ப பொறுப்புக்கள், பிள்ளைகள்-உடன்பிறந்தோர் கல்வி, திருமணம் ஆகிய அனைத்தும் அடங்கும். செல்ஃபோன்,இன்டர்நெட்,ஈ-மெயில் போன்ற நவீன தொழில்நுட்ப சாதனங்களையே தமது தோழர்களாகக் கொண்டிருக்கும் இன்றைய இளைய சமூகம் பெரும்பாலும் தொடர்புகளுக்காகவே இவற்றைப் பயன்படுத்தி வருகின்றது. கல்வித் தகுதி வித்தியாசமின்றி குவைத் தமிழ் இளைஞர்கள் இதில் ஒத்துப் போகின்றார்கள். பட்டதாரிகளில் மட்டுமே 95% பேர் அறிவுவளர்ச்சிக்காக இவற்றைப் பயன்படுத்துவதாகக் கூறுகின்றார்கள்!

தனியார் நிறுவனம் ஒன்றில் கணிணி மென்பொருள் நிகழ்வு ஆய்வாளராக – Computer Software Program Analyst பணிபுரியும் நவீன்,'இன்றைய இளைஞர்கள் தொழில்நுட்ப வளர்ச்சியை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதில் முன்னணியில் இருக்கின்றார்கள். ஆயினும் சுபிட்சமான வாழ்க்கைக்கு அது மட்டுமே அவசியமில்லை, மாறாக, உண்மையான இறைபக்தியும் நேர்மையான வாழ்வும் மேலோங்கியிருப்பதே அவசியம்' என்கின்றார்.

தங்களுக்குத் தாங்களே உந்துசக்தியாக இருக்கும் இன்றைய இளைய சமூகம் கடுமையாக உழைப்பதில் பின்னடைவதில்லை! குவைத்தை அழகுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கும் முஸ்தஃபா என்கின்ற தேவர் ஆனாலும் சரி, வீட்டுவேலையில் மனமுவந்து சேவகம் புரியும் ராணி ஆனாலும் சரி பணிதிருப்தியே தமது விருப்பம் என்கின்றனர்.

தகுதிதான் தமது பணிச்சிறப்புக்கு தீர்மானமாக இருப்பதை பெரும்பாலும் முழு குவைத்தும் ஒப்புக்கொள்வதுபோல் தமிழ் இளைஞர்களும் ஒப்புக்கொள்கின்றார்கள். ஒவ்வொருவரும் வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பது தெரிகின்றது.

படித்த பட்டதாரி இளைஞர்கள் மத்தியில் தலைமைப் பண்பும், தன்னார்வமும், பொதுநோக்கும் கொண்ட இலட்சியப்பார்வை காணப்படுகின்றது. எந்தவொரு இளைஞனும் குமாஸ்தா மனப்பான்மை கொண்ட குறிப்பிட்ட பணிநேர முறையை விரும்புவதில்லை.

குறைந்த அளவு கல்விநிலை கொண்ட தொழிலாளர் வர்க்கத்தினர் மத்தியில்தான் குடும்பத்துக்கு மரியாதை தரும் மனப்பாங்கு அதிகமாக இருக்கின்றது என்றில்லை. மாறாக, படித்த இளைஞர்கள் எவ்வளவுதான் நாகரிக முன்னேற்றம் கண்டிருந்தாலும் திருமணமான பின்னர் பெற்றோருடன் வசிப்பதையே விரும்புகின்றார்கள்.

புரிந்துகொள்ளாத, பரஸ்பரம் மனநிலை ஒத்துப்போகாத வாழ்க்கைத்துணையோடு காலம் கடத்த இளைஞர்கள் தயாராக இல்லை. இந்திய நகர்ப்புறத்திலிருந்து வந்த இளைஞர்கள் பெரும்பாலும் தமது தனிமைமிக்க வாழ்வில் ஒருவர் மற்றவர்க்கு உற்ற துணையாக இருப்பதையே உண்மை வாழ்வாக இருக்க முடியும் என்கின்றனர். பெரும்பாலும் இலங்கை இளைஞர்கள் படித்த சமூகத்தினராக இருப்பதால் இதுவிஷயத்தில் தீர்மானமான முடிவில் இருக்கின்றார்கள்.

20-ஆம் நூற்றாண்டின் மத்திமப் பகுதியில் ஏற்பட்ட புரட்சிகர சிந்தனைகள் அப்போதைய தலைமுறையை அறிவுப்பூர்வமாக சிந்திக்க வைத்தது என்றால், இன்றைய புரொஃபஷனல் தலைமுறை அத்துடன் பொறுப்புணர்வையும் சேர்த்துக் கொண்டிருப்பது ஆரோக்கியமான விஷயம். கல்வி, வேலை, திருமணம் என்று வேகமாக முன்னேறும் இன்றைய இளைஞர்-இளைஞிகளுக்கு நல்ல நட்பு வட்டாரமே துணையாக

### கனவு

குவைத்தில் வாழ்க்கை கனவு நிறைவேறியதா?

| | | |
|---|---|---|
| நிறைவேறியது | 6% | முஸ்லிம்கள் 28% |
| இல்லை | 1% | முஸ்லிம்கள் 25% |
| இனி, நிறைவேறும் | 93% | முஸ்லிம்கள் 47% |

### தகவல்-தொடர்பு

ஈ-மெயில்,இன்டர்நெட் பயன்பாடு எதற்காக?

| | | |
|---|---|---|
| அறிவு வளர்ச்சிக்காக.. | 9% | முஸ்லிம்கள் 44% |
| பொழுதுபோக்க.. | 13% | முஸ்லிம்கள் 5% |
| தொடர்புகளுக்கு.. | 78% | முஸ்லிம்கள் 51% |

### குடும்பம்

திருமணத்துக்குப் பின்னரும் பெற்றோருடன் வசிப்பீர்களா?

| | | |
|---|---|---|
| ஆம்! | 92% | முஸ்லிம்கள் 88% |
| இல்லை..! | 6% | முஸ்லிம்கள் 9% |
| அந்த நேரத்தில் முடிவெடுப்பேன்..! | 2% | முஸ்லிம்கள் 3% |

| | | | |
|---|---|---|---|
| % | 33% | 2% | 6% |
| ரிந்தும் (முஸ்லிம்கள் 100%) | பெற்றோரிடமிருந்து | நம்பிக்கை இல்லை | தெரியாது |





இருக்கின்றார்கள்.

என்னதான் பெற்றோரின் கட்டுப்பாடு பிள்ளைகளைத் துருத்தினாலும், கருத்துக் கணிப்பில் கலந்துகொண்டவர்களில் திருமணமாகாதவர்கள் ஏறக்குறைய 91% பேர் திருமணத்துக்குப் பிறகும் பெற்றோருடன் வசிப்பதையே விரும்புகின்றார்கள். ஆனாலும் வாழ்க்கைத் துணையின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதையும் அவர்கள் விட்டுவிடத் தயாரில்லை. எனினும் இயலாதபட்சத்தில்தான் தனிக்குடும்பம் அவசியம் என்பதையும் ஒப்புக்கொள்கின்றார்கள்.

சுருங்கக் கூறின் இன்றைய நவீன தமிழ் இளையதலைமுறையை கணிணியின் மேற்திரையில் -Desktop காணப்படும் Icon-க்கு ஒப்பிடலாம். பார்த்தால் அது ஒரு மாயைதான்...வெறுமனே ஒரு காட்சிப் பொருளாகத்தான், ஓய்வாக இருப்பதுபோன்றுதான் அது தெரியும். ஆனால், அதை 'கிளிக்'-கினால் காட்சிகள் திடீரென மாறி பல அரிய விஷயங்கள் கொண்ட புதியது தோன்றும். ■



உள்ளத்தில் உண்மையான ஏகத்துவ நம்பிக்கை ஆளுமை வென்றெடுக்கும் வகையிலான மதத்தை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும்!

*திரு.அஜீஸுர் ரகுமான்*
ஆசிரியர்
நளவன்கா தெலுகு மாத இதழ்



# மனக்கருவூலங்களின் திறவு கோல் மதம்


# மதநம்பிக்கையின்

இதயங்களை இணைக்கும் சக்தி மதங்களிடையே தான் தஞ்சம். மதங்கள் மனிதனை மறுமலர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதுடன் எல்லோரையும் ஒரே ஒளியின் நிழல்களாக்குகின்றது. மதங்கள் பல விதங்கள் இத்தரையில் காணப்படினும் சத்திய மதமே சதாவும் ஜெயிக்கும் இவ்வுலகில். மதம் ஒரு அபின் - என்றான் காரல் மார்க்ஸ்! ஆனால், இன்று அவன் உயிரோடிருந்திருந்தால் உண்மை விளங்கியிருக்கும்!

முன்னேறத் துடித்துக் கொண்டிருக்கும் சிறுநகர இளைஞர்களாயினும் சரி, மல்டி ப்ளக்ஸ் காம்ப்ளக்ஸ் எனப்படும் பல்லடுக்கு மாளிகைகளில் நுனிநாக்கு ஆங்கிலம் புரட்டும் பெருநகர யுவ-யுவதிகளாயினும் சரி, கழனி பிடித்து ஏர் உழுது வெற்றுடம்புடன் கதிரவனின் செங்கீற்றுத் தணலைத் தாங்கிக்கொண்டு வியர்வை சிந்தி வயலோடு இயைந்துவிட்ட விவசாயியானாலும் சரி..., அனைவரிடத்திலும் ஒரு புதிய நடைமுறை கோலோச்சிவிட்டிருக்கின்றது.

விஞ்ஞானத்தை மட்டுமே மேன்நோக்க வைத்து இயற்கையை இரண்டாம்பட்சமாக்கிய இவர்களில் பலரும் மதநம்பிக்கை புறந்தள்ளிட முடியாத ஒன்று என்பதை ஒப்பக்கொண்டுவிட்டார்கள்!

எந்த நம்பிக்கை உண்மையானது என்பது குறித்த தர்க்க விவாதத்தை




“பணி திருப்தியே எனது முதல் விருப்பம்”

*முஸ்த.ஃபா*
குவைத் நகரம்



“உலக வாழ்வு நிரந்தரமல்ல என்பதை இளைய சமூகம் உணர வேண்டும்”

*நிக்கத் ஃபாத்திமா*
சால்மியா



“உண்மையான இறைபக்தியும் நேர்மையான வாழ்வும் மேலோங்கியிருப்பதே அவசியம்”

*நவீன்*
ஃபர்வானியா

## கருத்துக்கணிப்பு குழு

மு.அ.அப்துல் முஸவ்விர்
ஸினூஃபா அன்ஸார்
ஃபர்ஸானா ரஃபீக்
முஹம்மத் ஜாபிர்

### உதவி

வசந்தம் வாசகர்கள்
முஹம்மத் ரஃபீக்
பிரேம் ஆனந்த்
குணா

## கருத்துக்கணிப்பு நடத்தப்பட்ட முறை

ஜுலை 10, 2008-க்கும் ஜுலை 28, 2008-க்கும் இடைப்பட்ட நாட்களில் இக்கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. குவைத்தில் வசிக்கும் தமிழ் பேசும் 18-38 வயதுக்குட்பட்ட இந்திய-இலங்கை குடியுரிமை சார்ந்த இளைஞர்-இளைஞிகளிடையே நடத்தப்பட்ட இக்கருத்துக் கணிப்பில் 546 இளைஞர் இளைஞிகள் கலந்துகொண்டனர். இவர்களில் ஆண்கள் 457 பேர். பெண்கள் 89 பேர்.

இக்கருத்துக்கணிப்பு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள இந்திய-இலங்கை குடியுரிமை சார்ந்த இளைஞர்-இளைஞிகளிடையே நடத்தப்பட்டது என்பதால், ஒரு குறிப்பிட்ட இந்திய-இலங்கை இளைஞர்-இளைஞிகளின் மனவெளிப்பாடே அன்றி, குவைத்தில் வசிக்கும் அனைத்து தமிழ் இளைஞர்-இளைஞிகளின் ஒட்டுமொத்த கருத்து அல்ல!

கருத்துக் கணிப்பு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் நடத்தப்பட்டது.

குவைத் தலைநகரம், ஜிலீப், ஹஸாவி, ஃபர்வானியா, ரவ்தா, சால்மியா, கேதான், ஜஹ்ரா, ஃபஹாஹீல் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டது.



# தாக்கமும் நடைமுறைவாழ்வும்

அறிவுப்பூர்வமாக அணுகத் தயாராய் இருக்கின்றார்கள். மதம் என்பது ஒரு வெற்றுச்சொல் அல்ல என்பதை புரிந்திருக்கின்றார்கள். விதிமுறைகளும், சரியான ஒப்புநோக்கும் கொண்ட நியதிகளை ஒட்டிய கருத்தோட்டங்களிலுமே நம்பிக்கை கொண்டுள்ள இன்றைய இளைய உலகம், ஆன்மிக விஷயத்தில் அலட்சியமானவர்களாக இருக்கத் தயாரில்லை.

இந்தியாவை எடுத்துக்கொள்வோம்! உலகின் மாபெரும் ஜனநாயக நாடான இங்கு இந்து,இஸ்லாம்,கிறித்துவம், சீக்கியம் உள்ளிட்ட பன்முக சமுதாயங்கள் உள்ளன. அதேபோல், சிறிய தீவான இலங்கை, புத்த பெரும்பான்மையினர், இந்து, முஸ்லிம்கள்,கிறித்தவர் என்று வெவ்வேறு மதத்தினரைக் கொண்டுள்ளது.

இவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் குவைத் நாட்டில் பல்வேறு துறைகளில் பணிபுரிகின்றனர். வீட்டுவேலை முதல் அமைச்சக விவகாரத்துறைகள் வரை, ஓட்டுநர் முதல் எண்ணெய்வள ஆய்வு வரை குவைத் வளர்ச்சியில் இவர்தம் பங்கு குறிப்பிடத்தக்கது.

புதிய வாழ்க்கை முறைகள் இவர்களை எப்படி புடம் போட்டிருக்கின்றது?

இந்திய-இலங்கை தமிழ் இளைஞர்-இளைஞிகளிடையே வசந்தம் ஆசிரியர் குழுமத்தினர் மேற்கொண்ட ஒரு கருத்துக்கணிப்பு இவர்களிடையே மதநம்பிக்கையுடனான நடைமுறை வாழ்வு எப்படி கோலோச்சுகின்றது? என்பதை அழகாகப் படம் பிடித்துக் காட்டியது.

தூங்குவது, டி.வி. பார்ப்பது, வேலைக்குப் போவது எனும் ஓர் குறிப்பிட்ட வட்டச்சுழலுக்குள் தம் குவைத் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாலும் பெரும்பாலும் இந்த குவைத்வாழ் இந்திய-இலங்கை தமிழ் இளைஞர் சமூகம் மதக்கண்ணோட்டத்தில் நடைமுறை வாழ்வின் யதார்த்தத்தை உணர்ந்திருக்கின்றது.

வாழ்க்கையில் மதம் மிக்க அவசியம் என்று 100% பேர் கூறினாலும் ஏறக்குறைய 59% பேர் தமது மதத்தில் திருப்தி இல்லை என்கின்றனர். பெற்றோர் வழியாக மட்டுமே தமது மதத்தை பின்பற்றுவதாக அபரும்பாலானவர்கள் கருத்து தெரிவித்தனர். இதில் இந்துமத தமிழ் இளைஞர்கள் முன்னணி (92%) வகிக்கின்றனர். இதற்கு முற்றிலும் மாறாக, தமது மதத்தை அறிந்தும் புரிந்துமே பின்பற்றுவதாக முஸ்லிம் இளைஞர்கள் (100%) தெரிவிக்கின்றார்கள்.

புதிய வாழ்க்கை வளங்கள் இளைய சமூகம் மதத்தை வெறுக்க வைத்திடவில்லை. மாறாக, அதனிடம்தான் அவர்களைத் தஞ்சம் புக வைத்திருக்கின்றது.

எமது கருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்களில் 546-இல் 382 பேர், வழிபாடு பற்றிய அம்சங்கள் ஆத்ம திருப்தியைத் தருவதாகக் கூறினாலும், இஸ்லாமிய வழிபாடுகளில் மட்டுமே சரியான ஒப்புநோக்கும்,ஒழுங்குமுறையும்,சம நீதியும் இருப்பதாகக் (முஸ்லிம்கள் 100%, இந்துக்கள் 78%, கிறித்துவர்கள் 52%) கூறுகின்றனர். வளைகுடா நாடுகளில் தாம் காணும் சமநீதியான இஸ்லாமிய தொழுகை முறையையே இதற்குக் காரணம் காட்டுகின்றனர் முஸ்லிமல்லாத இளைஞர்கள்!

தமது மதஉணர்வுகள் ஒரு சிலரிடத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தாலும், உண்மையான வாழ்க்கைமுறை அம்சம் தென்பட்டால் அதை ஆரத் தழுவ தயாராயிருப்பதாகக் கூறுவது, தற்போது சிலர் தமது மதத்தில் திருப்தியுடன் இல்லை என்பதைக் காட்டுகின்றது. ஆனால் முஸ்லிம் இளைஞர்களும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோரும் (100%) மட்டுமே தாம் சரியான வாழ்க்கையில் நிலைத்திருப்பதாக மனப்பூர்வமாக நம்புகின்றார்கள். இதைவிடுத்து வேறு உண்மை நெறி இல்லை என வாதிடுகின்றார்கள். இந்துக்கள், கிறித்துவர்கள் மற்றும்

தொடர்ச்சி... 14 -ஆம் பக்கம்

**மதம்**

உங்கள் மதத்தில் சமநீதி உள்ளது என்கின்றீர்களா?

| | | |
|---|---|---|
| ஆம்..! | 52% | முஸ்லிம்கள் 100% |
| இல்லை | 44% | முஸ்லிம்கள் 0% |
| தெரியவில்லை | 4% | முஸ்லிம்கள் 0% |

**வாழ்க்கை**

மரணத்துக்குப் பின் வாழ்வு உள்ளது என்கின்றீர்களா?

| | | |
|---|---|---|
| ஆம்..! | 97% | முஸ்லிம்கள் 100% |
| இல்லை | 2% | முஸ்லிம்கள் 0% |
| தெரியவில்லை | 1% | முஸ்லிம்கள் 0% |

**வெற்றி**

வெற்றிக்கு அளவுகோலாக எதைக் கருதகின்றிர்கள்?

| | | |
|---|---|---|
| இறையச்சம் | 41% | முஸ்லிம்கள் 44% |
| வசதிகள், பணம் | 6% | முஸ்லிம்கள் 0% |
| இரண்டும் | 53% | முஸ்லிம்கள் 56% |




# குறுக்கெழுத்துப் போட்டி பரிசளிப்பு

- தலைமையகத்திலிருந்து இளவேனில்

**தலைமையகம்**

1


3


2


வசந்தம் முதலாவது குறுக்கெழுத்துப் போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்ச்சி IPC -இல் நடைபெற்றது.

முதலாவது பரிசு (நோக்கியா செல்லிடைப்பேசி) பெற்ற சகோதரர் அருள்தாஸ் (படம் 1) அவர்களுக்கு IPC,கப்த் கிளையிலும், 2-ஆவது பரிசு (கைக்கடிகாரம்) பெற்ற சகோதரி ஷர்மிளா (படம் 2) அவர்களுக்கு IPC, ரவ்தா பெண்கள் கிளையிலும், 3-ஆம் பரிசு (திருக் குர்ஆன் குறுந்தகடு) பெற்ற சகோதரர் காதர் ஹுஸைன் (படம் 3) அவர்களுக்கு தலைமையகத்திலும் பரிசுகள் வழங்கப்பட்டன.

### ஜூன் மாத குறுக்கெழுத்துப் போட்டி வெற்றியாளர்கள்

1. மர்யம்-ஜாப்ரியா
   (நோக்கியா செல்லிடைப்பேசி)
   Ph:7336046 Civil ID 262032001294
2. K. மாரிமுத்து - சபா-அல்-நாஸர்
   (கைக்கடிகாரம்)
   Ph:9802618 Civil ID 278072604635
3. G. காஜா பாஷா கவுஸ்பாஷா
   (திருக் குர்ஆன் குறுந்தகடு)
   Ph:7758529 Civil ID 274051602317

- ரவ்தாவிலிருந்து ராபிதா

**ரவ்தா**

# சிறைச்சாலை விஜயம், ஏகத்துவ பிரகடனம்!

இஸ்லாமிய அழைப்பு பணியகங்களின் சேவை திட்டங்களில் ஒன்றே சிறைச் சாலைகளின் தரிசிப்புக்கள். இதன் மூலம் நல்லறிவுச் சிந்தனைகளைக் கொண்டு அங்குள்ளவர்களை விழித்தெழச்செய்வதும் உயரிய நற்போதனைகளை அவர்களுக்கு வழங்குவதுமாகும்.

ரவ்தா பெண்கள் பிரிவு அழைப்புப் பணியாளர்கள் பிரதி ஒவ்வொரு கிழமையும் குவைத்- மத்திய சிறைச் சாலைக்கு விஜயம் செய்கின்றனர்.

அந்த விஜயத்தின்போது சத்தியவழியைத் தம் வாழ்க்கையாக தேர்ந்தெடுத்த இலங்கைச் சகோதரிகளுடன் (படம் 3), இஸ்லாமிய அழைப்பக சகோதரிகளான ஷரீ.புன்னிஸா ஃபாருக் (படம் 1), ஸினூஃபா அன்ஸார் (படம் 2) ஆகியோர் காணப்படுகின்றனர்.

- ரவ்தாவிலிருந்து ராபிதா

**மத்திய சிறைச்சாலை, குவைத்**



# கற்கைநெறி கவுரவ விழா!

புதிதாக இஸ்லாத்தை ஏற்றோருக்கான மார்க்க பயிற்சி நெறிமுறைகள் போதிக்கும் வகுப்புக்கள் இஸ்லாமிய நிலையம் - IPC மகளிர்ப் பிரிவு, ரவ்தா-வில் தொடர்ந்தும் நடத்தி வரப்படுகின்றது. இவ்வருடத்தில் இரண்டாம் தடவையாக கற்கை நெறி செம்மையுற நடைபெற்று முடிவடைந்தன. இதில் இலங்கை நாட்டைச் சேர்ந்த சார்ந்த மாணவியர் கலந்து கொண்டு பயன் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குரிய பிரத்யேக கவுரவ விழா, கடந்த ஜுலை மாதம் 1-ஆம் தேதி ரவ்தா, IPC செவியரங்கத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. புகழனைத்தும் இறைவனுக்கே!

சமூக ஆய்வுப் பொறுப்பாளரான சகோதரி ஃபாய்கா முஹம்மத் அவர்களின் தலைமையில் நடந்த இவ்விழாவில் தூய்மையும் தொழுகையும் என்ற பாடத்தை சிறப்பாக நிறைவு செய்த 20 சிங்களம் பேசும் சகோதரிகளுக்கு சான்றிதழ்களுடன் பரிசுகளும் வழங்கப்பட்டன. சகோதரி ஸினூஃபா அன்ஸார் நிகழ்ச்சியை சிறப்பாக ஒழுங்கமைத்ததுடன் சகோதரி ஆயிஷா ஃபாலிஹா பாருக் அவர்கள் விழாவை நடத்தி வைத்தார். மகளிர் கல்வியை வலுப்பெறச் செய்வதில் இஸ்லாமிய அழைப்பு பணியகங்கள் பெரிதும் அக்கறை செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.


1

2

3

- தலைமையகத்திலிருந்து அமீர்

தலைமையகம்

## உயிரியல் பூங்கா விஜயம்

இஸ்லாமிய நிலையம், தலைமையகத்திலிருந்து புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய தமிழ் சகோதரர்கள் குவைத் உயிரியல் பூங்காவுக்கு சுற்றுலா சென்றனர்.இறைபடைப்பின் ஒப்புவமையில்லா ஆதாரங்களாகத் திகழும் வகை வகையான விலங்கினங்களைக் கண்டுகளித்தனர். அழைப்புப்பணி சகோதரர் அமீர் ஹஸன் நைனார் அவர்களை வழிநடத்திச் சென்றார். இறைபடைப்புக்களின் குறிப்பாக விலங்கினங்கள் மற்றும் பறவையினங்களைக் குறித்து அதிசயித்துப் பேசும் திருக் குர்ஆன் வசனங்கள் மேற்கோள்காட்டி விளக்கினார்



## கல்விச் சுற்றுலா

கேதான், இஸ்லாமிய நிலைய கிளையிலிருந்து புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய தமிழ் சகோதரர்கள் ஷாப் பொழுதுபோக்குப் பூங்காவுக்கு பயணம் சென்றனர்.

அழைப்புப்பணி சகோதரர் முஹம்மத் ஜாபிர் தலைமையில் சென்ற அவர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் கலந்துகொண்டு மகிழ்ந்தனர். பின்னர், உலகவாழ்வின் தற்காலிக நிலைமை குறித்து சகோதரர் ஜாபிர் அவர்கள் விளக்கிப் பேசினார்.






- கேதானிலிருந்து ஜாபிர்

கேதான்



இளைஞர் சிறப்பிதழ்

தோழமை

# இளைய சமூகமே..!
# உன் தோழமை யாரோடு?

வாலிபப் பருவம் வனப்புமிகு பருவம். வண்ணக்கனவுகளை இலட்சிய நிறங்கள் கொண்டு தீட்டும் பருவம். பரவசங்களும், பல்வித எண்ணங்களும் பன்னீர் பூக்களின் வாசம் கொடுக்கும் பருவம். அப்பருவம் ஒவ்வொருவரது வாழ்வினதும் விலைமதிக்க முடியாத பொற்காலம்!. நண்பர்களுடனும் அன்பர்களுடம் சேர்ந்து அற்புதங்கள் பல புரியும் சாகசக்காலம் அக்காலம்! அதிக உழைப்பால் கூடிய பிரதி பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான இக்காலத்தில், தனித்தே அல்லாமல், நல்ல நண்பர்களுடன் கூட்டாக இயங்கினால் அதன் பிரதிபலனை வெற்றிக்களியின் உன்னத சுவையை வார்த்தைகளில் வடிக்க இயலாது!

இவ்வாறான நண்பர்களை நாம் அடையாளம் காண்பது எவ்வாறு? அவர்களைத் தேர்வுசெய்து கொள்வது எவ்வாறு? இத்தகைய அறிவு ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும். நண்பர்கள் எனும் ஒரு அமைதிச்சோலையை ஒவ்வொருவரின் மனமும் விரும்புகின்றது. அதில் இதமான தூயக்காற்றை சுவாசிக்கலாம், கண்கவரும் பலவர்ண மலர்களையும், பசுமைக் காட்சிகளையும் பார்க்கலாம், பறவைகளின் இன்னிசை ஓசை கேட்கலாம். இதன் பெருமதியை அறியாமல் வஞ்சக நெஞ்சம் கொண்ட தீயோர்களுடன் நட்பு கொண்டுவிட்டு, 'காலத்தை வீணே இழந்துவிட்டோமே' எனும் மனஉளைச்சல்களுடன் பிரிந்தோர் பலர்.

மேலும், எம்மை அடையாளம் காட்டக்கூடியவர்களே, நண்பர்கள் என்பதால், அவர்களை இனங்கானும் இவ்விஷயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், நண்பர்களைத் தேர்வு செய்யும் இவ்விஷயத்தில் அழகிய அடிப்படை அம்சத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்:

"ஒரு மனிதன் தனது நண்பனின் பாதையிலேயே இருப்பான். எனவே, அவன் யாருடன் நட்பு கொள்வது என்பதைக் குறித்து கவனம் கொள்ளட்டும்."

நாம் நண்பர்களைத் தேர்வு செய்யும்போது அவர்களிடம் பின்வரும் மூன்று முக்கிய பண்புகள் காணப்படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்.

- அவர்கள் தமது இறைனை அஞ்சி, சிறந்த முறையில் அவனை வணங்கி வழிப்படுபவர்களாக...
- தமது குடும்பத்தவர்களை மதித்து அவர்களுடன் உறவைப் பேணுபவர்களாக....
- நற்குணங்கள் நிறைந்த பண்பாளர்களாகவும், பொறாமை, வஞ்சகம், குரோதம், வெறுப்பு போன்ற தீய குணங்களில் இருந்து தூய்மையான உள்ளம் கொண்டவர்களாக......

இருக்க வேண்டும். அல்லாஹ் புனித திருக் குர்ஆனில் இவ்வாறு எச்சரித்துகூறுவதைப் பாருங்கள்,

*"அந்(த மறுமை) நாளில் நண்பர்கள் சிலர் சிலருக்கு எதிரியாகி விடுவர். ஆனால், இறை யச்சமுள்ளவர்களைத் தவிர! (43:67)*

*"என்னுடைய துக்கமே! (பாவம் செய்யும் படி தூண்டிய) இன்னவனை நான் என்னுடைய நண்பனாக ஆக்கிக் கொள்ளாமல் இருந்திருக்க வேண்டாமா? நல்லுபதேசம் என்னிடம் வந்ததன் பின்னரும் அதிலிருந்து அவன் என்னைத் திருப்பி விட்டானே! (என்று மறுமை நாளில் கூறுவான்.) (25:28-29)*

இனி, நண்பர்களை நாம் இனங்கண்டு விட்டால் முதலில் அவர்களது உள்ளங்களை வெல்ல மூன்று பிரதானமான வாயில்களைக் கூறமுடியும்.

- நன்னடத்தை : சந்தித்தால் ஸலாம்-வாழ்த்து கூறுதல், மலர்ந்த முகத்துடன் சந்தித்தல், வார்த்தைகளிலும் செயலிலும் வாய்மையுடன் இருத்தல், விட்டுக் கொடுத்தல், மதித்தல், நேர்மையோடு நடத்தல், அன்பு போன்றவை.
- தேவைகளை நிறைவேற்றல்: தேவையின் போது உதவி செய்தல், பிரச்னைகள், துன்ப-துயரங்களின்போது கைகொடுத்தல், நோய்வாய்ப்பட்டால் பார்க்கச் செல்லல், சிறந்த முறையில் ஆலோசனைகளை வழங்குவதும் அறிவுறுத்துவதும்.
- தொடர்பைப் பலப்படுத்தல்: அடிக்கடி அல்லது இடைக்கிடையாவது சந்தித்தல், அவர்களது முகவரி தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை அறிந்திருத்தல், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அவர்களைக் காணாவிட்டால் அவர்களைப் பற்றி விசாரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே, நல்லோர்களது தோழமை எப்போதும் எமக்கு நன்மையானதாகவே இருக்கும், தீய நண்பர்களால் சிறு சிறு தீங்குகளாவது ஏற்படும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள், *"ஒரு நல்ல தோழனுக்கும் தீயதோழனுக்கும் உதாரணம் முறையே, கஸ்தூரி விற்பவனையும் கொல்லனையும் பேன்றதாகும். கஸ்தூரி விற்பவனிடம் நீ இருந்தால் நீ நஷ்டமடைய மாட்டாய். ஒன்று, கஸ்தூரியை வாங்கலாம் அல்லது (உன்னிடம்) அதன் வாசனையாவது வீசும். ஆனால் கொல்லனிடம் நீ இருந்தால் (தீப்பொறிகள்) உனது உடலை அல்லது உனது ஆடையை எரித்து விடும். அல்லது உன்னிடமிருந்து துர்நாற்றம் வீசும் -ஆதாரம்: புகாரி*

ஆனால், தீயோர்களோடு நட்புக் கொண்டு அவர்களைத் திருத்த முடியும் என்ற உறுதியிருந்தால் அவர்களுடன் தோழமை கொண்டு அவர்களை நல்வழிப்படுத்தலாம். இதற்கு அல்லாஹ்விடம் மகத்தான நற்கூகூலியும் உண்டு.இத்தகைய தோழமை அவனை ஏகத்துவ நேர்வழியின்பால் இட்டுச்செல்லும் என்றால்.... அதற்குரிய விளைவு என்ன? இதோ இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: *"உங்கள் மூலம் ஒருவனுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவது, உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் விட சிறந்ததாகும்.*

ஆம், தோழமை கொள்வோம்.. தூய தோழரோடு! எம் இளமையை இதப்படுத்துவோம் ...இனிய நினைவுகளோடு! ■





எழுத்து

ஃபர்ஸானா ரஃபீக்



மதங்கள்

# இதயங்களின் மணிச்சரங்கள்!

இன்று உலகில் அனைத்துத் தரப்பினராலும் பேசப்படும் தலைசிறந்த நாவலர்! மதங்களுக்கிடையிலான ஒப்புமை ஆய்வில் தனிச்சிறப்பு மிக்க தொலைநோக்குப் பார்வை கொண்டவர். உலகின் பெரும்பான்மை மதங்களில் இறை பற்றிய கருத்தோட்டம் என்ன என்பது பற்றிய அவரது ஆழ்ந்த ஆய்வுப் பயணம் அறிவுக்கு விருந்து படைப்பது. எண்ணிலடங்கா இரகசியங்களைத் தன்னுள் கொண்டிருக்கும் இந்தப் பேரண்டத்தைப் படைத்தவனை ஒவ்வொரு விதமாகத் துலாக்கோலிடுகின்றன அவரின் நேரிய விளக்கங்கள்!

இஸ்லாம், கிறித்துவம், யூதம், இந்து, பௌத்தம் என்று பெரும்பான்மைமதங்களும்பல்வேறு கருத்தோட்டங்களைத் தாங்கி மக்களின் சிந்தனைகளை உரசுகின்றன. அவற்றின் இந்த வெவ்வேறுவித கருத்துப் பார்வைகள் இன்றைய உலகின் ஏராளமான விஷயங்களுக்கு விடிவைத் தருகின்றனவா? வகைப்படுத்தப்பட்ட மதங்களின் இறைக்கருத்தோட்டங்களில் எது உண்மையானது? எந்த இறைவன் உண்மையில் இருப்பவன்? அவன் தனித்தவனா? கூட்டானவனா? அவனது பண்புச்செயல்கள் என்ன? வணக்கத்துக்கும், அடிபணிதலுக்கும் ஏற்ற அந்த அதிபதி யார்?


ஒரு வாழ்விற்குள் பாரிய இடம் பிடிக்கும் மதங்களில் வேரூன்றி நிற்கும் இறைக்கருத்தோட்டம் பற்றிய டாக்டர். நாயக் அவர்களின் இந்த மதங்களிடை ஒப்புமை ஆய்வு பகற்பொழுதில் பாரையே ஒளியில் பரிணமிக்கச்செய்யும்கணக்கதிர்கள் போல.. துணிவாக... தெளிவாக விளக்கங்களை விக்கலின்றி வழங்குகின்றது.

வாருங்கள்! இலகுதமிழ்நடையில் டாக்டர் நாயக்கின் இறைக்கருத்தோட்ட ஆய்வுக்கடலில் மூழ்கி உண்மை இறைமுத்தை கண்டெடுப்போம்! அதன் வழியில் நம் வாழ்வை செப்பனிடுவோம்

உண்மை இறையருள் துணை நிற்கட்டும்!

(ஆ-ர்)

பெரும்பான்மை மதங்களில் இறை பற்றிய கருத்தோட்டம் - I




மனித இதயங்கள் நேரிய பாதையில் சங்கமிக்க மதம் அவனுக்குப் பெரிதும் துணை புரிகின்றது. சத்தியமிக்க ஒரு வழி அவனை சத்தியவானாக்குகின்றது. இவ்வுலக மக்களை ஒருங்கிணைப்பதில் மதங்களே சிறந்த வழிகோலாகும். மதங்கள் மூலம் கூறிடப்பட்டுள்ள மனிதர்கள் அம்மதங்களை தெரிந்து கொள்ளக் கடமைப்படுவதுடன் அதில் சத்தியமானதைத் தேர்ந்தெடுக்க வேண்டியதும் அவசியம். இதயங்களை ஒரு புள்ளியில் அமைக்கும் மதமே சிறந்த வாழ்க்கையின் மணிச்சரம்! நித்திய வாழ்வமைக்க சத்திய வழி நடக்க வித்திடும் விஷயங்களை செவியேற்போம்.

எம்மதமும் சம்மதம் எனும் கொள்கையை கொண்டொழித்து, இந்நவீன யுகத்தில் எம் அறிவிற்குத் தாழ்ப்பாழிடப்பட்டுள்ள மடமைத்துவங்களைத் தகர்த்தெறிவோம். சத்திய வாழ்க்கை நெறியை வென்றெடுப்போம்.

## உலக பெரும்பான்மை மதங்களின் வகைப்பாடு!

இன்றைய உலகம் மனிதனை வழிநடத்திச் செல்ல பயன்படுத்திக் கொண்ட பாதையே மதம் எனலாம்! பாரின் பல்வேறு சமூகங்களில், நாடுகளில், இனங்களில் தலைத்தோங்கி நிற்கும் எண்ணற்ற மதங்களை “ஷெம்” மரபில் வந்த, செமிட்டிக் இனத்தைச் சேர்ந்த, மனிதப் பேரினஞ்சார்ந்த மதங்கள் - Semitic Religions என்றும், இவ்வகையினரில் உள்ளடங்காத செமிட்டிக் இனத்தவரல்லாத, மனிதப் பேரினஞ் சாராத பிரிவினர் - Non-Semitic Religions என்றும் வகைப்படுத்தலாம்! மேலும், இந்த செமிட்டிக் இனத்தவரல்லாத மதங்களை, ஆரிய மதங்கள் Aryan Religions என்றும் புற ஆரிய மதங்கள் - Non-Aryan Religions என்றும் பிரிக்கலாம்!

## “ஷெம்” மரபில் வந்த மனிதப் பேரினஞ்சார்ந்த மதங்கள் - Semitic Religions:-

இவ்வகை மதங்கள் செமிட்டிக் இனத்தவர் கொண்ட மனிதப் பேரினஞ் சார்ந்தவற்றிலிருந்து பிறந்தவை! கிறித்துவப் புனித நூலான பைபிளின் கருத்துப்படி இறைத்தூதர் நோஹா எனும் நூஹ் (அலை) அவர்களுக்கு 'ஷெம்' எனும் மகன் இருந்தான். இந்த 'ஷெம்' உடைய வழித்தோன்றல்களே செமிட்டிக் இனத்தவர் - Semites எனப்படுகின்றனர். இதனடிப்படையில் நோக்கினால், யூதர்கள், அரபிகள், அசீரியர்கள், பினீசியர்கள் (இவர்கள் பினீசியாவில் வாழ்பவர்கள், பினீசியாவில் வாழ்பவர்களும் பினீசிய மொழி பேசுவோரும் இதில் அடங்குவர்-மொழியாக்க ஆசிரியர்) உள்ளிட்ட இனத்தவரிடையே காணப்பட்ட மதங்களே செமிட்டிக் இனத்தைச் சேர்ந்த, மனிதப் பேரினஞ்சார்ந்த மதங்கள் - Semitic Religions ஆகும். யூதம், கிறித்துவம் மற்றும் இஸ்லாமிய மதங்களே இவற்றில் மிகப்பெரிய மதங்களாகும்.

இந்த மதங்கள் அனைத்துமே தூதுத்துவ வழி மதங்கள். அதாவது, இறைத்தூதர்கள் மூலமாக வழங்கப்பட்ட இறைவழிகாட்டுதல் மீது நம்பிக்கை கொண்டவை இம்மூன்று மதங்களும்!

அடுத்த இதழில்..வல்ல இறைவன் நாடினால்..!!

எழுத்து



Dr. ஜாகிர் நாயக்

தமிழில்
இளவேனில்





தொடர் திருக்குர்ஆன் பேசுகின்றது - 5

# மனித இரகசியங்களின் இறங்குதளம் இறைமறை குர்ஆன்

எழுத்து



ஃ.பைஸல் முஹம்மத்

மனிதா நீ யார்? எங்கிருந்து வந்தாய்? ஏன் வந்தாய்? எங்கே உன் பயணம்? அழகிய தோற்றத்தில் உன்னைப் படைத்தவன் யார்? உன் படைப்பின் இரகசியம் என்ன? இதனை நீ சிந்தித்ததுண்டா, என்ன? உன்னைப் படைத்தவனின் கட்டளைகளுக்கு செவி சாய்க்கப் போகின்றாயா? அல்லது உன்னை ஆட்கொள்ள நினைக்கும் மனோஇச்சைக்கு அடங்கிப் போக முடிவு செய்துவிட்டாயா?

ஓ, மானுடனே! உனது அனைத்து அம்சங்களையும் அலசி உனது இரகசியங்களை விளிக்கும் இறைமறையாகிய என்னிடம் உனைக் குறித்து அறிவது உன் கடமை என்பதை அறிவாயா?

உனது முதல் இரகசியம் இதுவே:- உங்களிடையே வேற்றுமைக்கீற்றுக்கள் பல தென்பட்டாலும், நீங்களே இன்னபிற வித்தியாசங்களை உருவாக்கிக் கொண்டாலும் உங்கள் அனைவரின் மூலப்பொருளும் ஒன்றுதான்! அதுதான் களிமண்! உங்களைப் படைத்தவன் கூறுகின்றான்:-

*மனிதனை நாம் களிமண்ணின் சத்திலிருந்து படைத்தோம். பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் (செலுத்தப்பட்ட) விந்தாக ஆக்கினோம். பிறகு, அந்த விந்தினை இரத்தக்கட்டியின் வடிவத்தில் அமைத்தோம். பின்னர், அந்த இரத்தக்கட்டியை சதைக்கட்டியாய் ஆக்கினோம். பிறகு அச்சதைக்கட்டியை எலும்புகளாய் ஆக்கினோம். பின்னர் அவ்வெலும்புகளைச் சதையால் போர்த்தினோம். பிறகு, அதனை முற்றிலும் வேறொரு படைப்பாக வளரச் செய்தோம். பெரும் அருட்பேறுகள் உடையவன் ஆவான் அல்லாஹ்! படைப்பாளர்களிலெல்லாம் மிக அழகான படைப்பாளன். பின்னர், நிச்சயமாக நீங்கள் இதற்குப் பிறகு மரணிக்கக்கூடியவர்கள்தாம்! பிறகு, திண்ணமாக, நீங்கள் மறுமைநாளில் எழுப்பப்படுவீர்கள். 23:12-16*

மண்ணிலிருந்து வந்த நீ அந்த மண்ணுள்ளே அடங்க இருக்கின்றாய் என்பதை மறவாதே! உன் மனஇச்சைப்படி இயங்க உனக்கு உரிமை உண்டு என்று நினைக்கின்றாயா, என்ன? உன் சுயவிருப்பங்கள் மட்டுமே சுதந்தரம் கொண்டவை என்று முடிவு செய்துவிட்டாயா?

நிலைமை இப்படியிருக்க, இந்த பேரண்டத்தை, படைத்து தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதிபதியான அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கு அல்லவா நீ கட்டுப்பட வேண்டும்? அவன் காட்டிய வழிமுறைப்படி அல்லவா உன் வாழ்க்கை நடைபோட வேண்டும்?

மரணம் நிச்சயம் ஒருநாள் அனைவரையும் ஆரத்தழுவும். எனவே, அதுகுறித்து, எந்த ஐயமும் கொள்ள வேண்டாம். இறைவன் கூறுகின்றான்:-

*மனிதர்களே! மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை பற்றி உங்களுக்கு ஏதேனும் ஐயம் இருந்தால் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்: நாம் உங்களை மண்ணிலிருந்து-பிறகு இரத்தக்கட்டியிலிருந்து-பிறகு வடிவமைக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்படாத சதைப் பிண்டத்திலிருந்து படைத்தோம். உண்மைநிலையை உங்களுக்கு நாம் விளக்குவதற்காகத்தான் (இவற்றை நாம் எடுத்துரைக்கின்றோம்.) நாம் நாடுகின்ற (இந்திரியத்)தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருவறைகளில் தங்க வைக்கின்றோம். பிறகு, உங்களைக் குழந்தை வடிவில் வெளிக்கொணர்கின்றோம். (பிறகு உங்களை வளர்க்கின்றோம்) நீங்கள் வாலிபத்தை அடைவதற்காக! மேலும், உங்களில் சிலர் முன்னரே திரும்ப அழைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். வேறு சிலர் மிக மோசமான வயோதிகத்தின் பக்கம் திருப்பப்படுகின்றார்கள். யாவற்றையும் அறிந்த பிறகு எதையும் அறியாத நிலையை அடைவதற்காக! இன்னும் நீங்கள் பார்க்கின்றீர்கள்: பூமி வறண்டு கிடக்கின்றது. அதில் நாம் மழையை பொழியச் செய்ததும் உடனே அது சிலிர்த்து, செழித்து வளர்ந்து விதவிதமான அழகிய தாவரங்களை முளைப்பிக்கச் செய்கின்றது. 22:5*

உங்களின் அனைத்து இரகசியங்களையும், பரமகசியங்களையும் அறிந்த அந்த ஏகஇறைவனுக்கே அஞ்சுங்கள்! அவனே அகிலத்தைப் படைத்து, பரிபாலித்து வருபவன். அறிவின் உச்சகட்ட தாத்பரிய அம்சங்களை ஆராய...பின்பற்ற... என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், நீங்கள் வெற்றி பெறக்கூடும்.

*இன்னபிற ஆக்கபூர்வ இரகசியங்களுடன் உங்களை சந்திக்கின்றேன், அடுத்த இதழில், இறைவன் நாடினால்...!*

9-ஆம் பக்க தொடர்ச்சி

பிற மத இளைஞர்களில் 10-ஆம் வகுப்பு-O' லெவலில் 60 சதவீதத்தினரும், பட்டதாரிகளில் 56 சதவீதத்தினரும் தங்கள் மதம் சரியானதாகத்தான் இருக்கும் என்று நம்புகின்றனர்.

இனக்கவர்ச்சி இளைஞர்களிடையே மிகப்பெரும் தாக்கமாக இருப்பது கவலையளிக்கின்றது. ஆண்-பெண் சமநீதி குறித்த விஷயங்களில் பெரும்பாலோர் ஓர் திடமான முடிவைக் கொண்டிருக்கவில்லை! முஸ்லிம் இளைஞிகள் கல்வித்தரத்தில் பின்தங்கியிருப்பது இது விஷயத்தில் அவர்தம் மதத்தினர் கொண்டிருக்கும் பிற்போக்குத்தனமையே காரணம் என்று பெரும்பாலான முஸ்லிமல்லாத இளைய சமூகத்தினர் கருதுகின்றனர்.

ஆறுதலளிக்கும் ஒரு பொதுவான அம்சம் என்னவெனில், இருபாலார் இணைந்த கல்விமுறைக்கு அனைத்து மதஇளைஞர்களிடையேயும் ஆதரவு இல்லை என்பதே!

மரணத்துக்குப் பின் ஒரு வாழ்வு உள்ளது என்பதை பெரும்பாலும் அனைத்துமத இளைஞர்களும் ஏற்றுக்கொண்டாலும், உலகவாழ்வுக்குத் தரும் அளவு முக்கியத்துவத்தை மறுமை வாழ்வுக்கு தருவதில் பின்னோக்கியே உள்ளனர்.

பொருளாதார சுதந்தரம் என்பதன் ஆழிய பொருள் அமுங்கிவிட்டது என்பதை எமது கருத்துக்கணிப்பு காட்டியது. பதிலளித்த பெரும்பாலான இளைஞர்-இளைஞிகள் பணத்துக்கு தரும் அளவு முக்கியத்துவத்தை வேறு விஷயங்களுக்குத் தராதது கவலையளிக்கின்றது.

எனினும், சுபிட்சமான, வெற்றிக்கான வாழ்வுக்கு அடிப்படை அளவுகோலாக இறையச்சத்தையே

கருதுகின்றோம் என்பதை ஒப்புக் கொண்டாலும் அதனுடன் சேர்த்து பணத்தையும் கருதுவோர் 78% பேர் இருக்கின்றார்கள் என்பது ஆரோக்கியமான இளைய சமூகத்துக்கு அழகானதல்ல!

பன்முக சமுதாய அமைப்பில் அனைவரும் அவரவர் மதநம்பிக்கை சட்டங்களின்படி வாழ மதச்சுதந்தரம் பூரணமாக அமலில் இருக்க வேண்டும் என்பதை அனைவருமே ஒப்புக்கொள்கின்றார்கள். இந்திய-இலங்கை நாடுகளில் பொதுசிவில் சட்டம் எந்த வகையிலும் அமைதிக்கு தீர்வாகாது என்பதை திடமாக நம்புகின்றார்கள்.

மதநம்பிக்கையுடனான நடைமுறை வாழ்வின் தாத்பரிய தடங்களில் இன்றைய இளைய சமூகம் பக்குவமடைந்திருக்கின்றார்கள். அநீதிக்கு எதிரான கோபமும், குருட்டுத்தனமான மூடநம்பிக்கைகளுக்கு எதிரான கொந்தளிப்பும், தளரா தன்னம்பிக்கையின் உச்சகட்ட ஆர்ப்பரிப்பும், சுயகௌரவத்தின் பாதம் முத்தமிடும் அம்சங்களும் கொண்ட இன்றைய இளைஞர்கள் உடம்பை மட்டும் வளர்க்கவில்லை... இளைஞிகள் அழகை மட்டும் முன்னிறுத்தவில்லை.... மாறாக, அறிவுப்பூர்வமான பயன்பாட்டு வாழ்க்கைக்கே முக்கியத்துவம் தருகின்றார்கள். அதற்கு குவைத்வாழ் இந்திய-இலங்கை தமிழ் யுவ-யுவதிகளின் இந்த உள்ள உணர்வுக் கருத்துக் கணிப்பே சாட்சி!

துல்லிய வாழ்க்கை துலங்க, இலட்சியம் கரை காண வாழும் இவர்கள்...ஏகஇறைவனின் உண்மை வாழ்க்கைநெறிக்கு செவிசாய்த்தால் ....அவர்களை வெல்ல தரணிக்குத் திராணி இல்லை, அதுவே அவர்தம் வெற்றிக்கு எல்லை! ■



இளைஞர் சிறப்பிதழ்

தொடர்

மார்க்க விழுமியங்கள் - 4

# மனித வாழ்வின் உயர்வுப் படிகள் ஏகத்துவ கொள்கைகள்


எழுத்து



டாக்டர் அஷ்ஷேக் தப்தபாஈ

தமிழில்

அப்மு


இனி இறுதியாக, ஒன்றை உங்களுக்கு விளக்கமாகக் கூறுகின்றேன். இஸ்லாம் எனும் கட்டடம் ஐந்து முக்கிய தூண்களின் மீது நிறுவப்பட்டுள்ளது.

*1. வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும், எதுவும் இல்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள், அவனுடைய (இறுதித்)தூதர் ஆவார்கள் என மனமுவந்து மொழிவது 2. தினம் ஐவேளை இறைவனை தொழுவது. 3. தமது பொருள்வளத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை, குறிப்பிட்ட பிரிவினருக்கு வழங்குவது. 4. புனித ரமளான் மாதத்தில் நோன்பு நோற்றல் 5. புனித மக்காவின் கஅபா இறைஆலயத்துக்கு புனிதப்பயணம் மேற்கொள்ளல்...*

கவனத்தில் கொள்ளுங்கள்! ஒவ்வொருவருடைய ஆளுமையும் அவர்தம் இறைநம்பிக்கையை பலமாக்குவதில் குறிப்பிட்ட பங்கு வகிக்கின்றது. அனைத்துவகை தீமைகளிலிருந்தும் அவனைக் காக்கின்றது. இதுவும் ஒருவகை வழிபாட்டில் அடங்குகின்றது. அந்த வழிபாட்டுக்குரியவன் அல்லாஹ் மட்டுமே!

படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக ஒவ்வவொரு நாளும் இறைவனை ஐவேளை நினைவுகூறுதல் அவசியமாக இருக்கின்றது. இது இறைவனுடைய கட்டளை!

அதேபோல், ஒவ்வொரு முஸ்லிமும் ஏழை-எளியவர் மீது கருணையும் கரிசனமும் காட்ட வேண்டியது அவசியம். அதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக, செயல்பாட்டு அம்சமாக அமைகின்றது, ஜகாத் எனும் இந்த பொருள்வழி வணக்க வழிபாடு. அரபிமொழியில் ஜகாத் என்பதற்கு அதிகப்படியாகக்கூடியது, வளரக்கூடியது என்று பொருள். இதனால்தான், ஜகாத் வழங்கக்கூடியவர்களின் செல்வத்தில் அபிவிருத்தி வழங்குவதாக அல்லாஹ் கூறுகின்றான். இதுவிஷயத்தில் எதுவொன்றும் அதற்கு ஈடாக முடியாது.

எந்தெந்த பொருளுக்கு எவ்வளவு ஜகாத்...அது எந்த வகையினருக்கு..? என்பது போன்ற விஷயங்களை திருக் குர்ஆனும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையும் நமக்குக் காட்டித் தருகின்றன. அதேபோல், ஜகாத் பங்கிடப்படும் முறையும் சமூகத்தில் ஒரு பொருளாதார நிலைத்தன்மையை உருவாக்குகின்றது.

அடுத்து இஸ்லாமிய நாட்காட்டியின் 9-ஆவது மாதமான புனித ரமளான் மாதத்தில் அம்மாதம் முழுவதும் நோன்பு இருப்பது, ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகின்றது. நோன்பில் எண்ணற்ற பயன்களும் பலாபலன்களும் அடங்கியிருக்கின்றன. அவற்றை எண்ணிட முடியாது. இந்த கடமை படைத்தவனுக்கும் படைப்பினமாகிய ஒவ்வொரு நோன்பாளிக்கும் இடைப்பட்ட உறவை பலப்படுத்துகின்றது. இந்த மாதத்தைப் புனிதமிக்கதாக ஆக்கியதன் இரகசியம் இதுவே!திருக் குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதம் என்பதாலும் இது புனிதமிக்கதாக கருதப்படுகின்றது.

அதேபோல், வருடத்துக்கு ஒருமுறை புனித மக்கா மாநகருக்கு செல்வதும்! அங்கு நிர்மாணிககப்பட்டுள்ள உலகின் முதல் இறை இல்லமான கஅபா-வுக்கு புனிதயாத்திரை மேற்கொண்டு இறைகடமையை நிறைவேற்றுவது ஒரு முஸ்லிம் ஆற்ற வேண்டிய கடமை. உடல்நலமும், பொருளாதார வசதியும் மிக்க ஒவ்வொரு முஸ்லிமும் தன் வாழ்நாளில் ஒருமுறையேனும் கண்டிப்பாக இதனை நிவேற்றியே ஆக வேண்டும்.

அங்கு சென்று ஒவ்வொரு முஸ்லிமும் இவ்வாறு முழங்குகின்றார்கள்:

*லப்பைக் அல்லாஹும்ம லப்பைக், லப்பைக் லா ஷரீக லக லப்பைக், இன்னல் ஹம்த, வந்நிமத, லக வல் முல்க், லாஷரீகலக!*

இறைவா! ஊன்னுடைய அழைப்பை ஏற்று இதோ நான் வந்துவிட்டேன், இணைதுணையற்ற உன்னுடைய அழைப்பை ஏற்று வந்துவிட்டேன், புகழனைத்தும் உனக்கே உரியன, அருட்கொடைகளும் அரசாட்சியும் உன்னுடையதே, உனக்கு எவ்வித இணையுமில்லை!

சகோதரத்துவத்தை பறைசாற்றும் இந்த உலக சகோதரத்துவ மாநாடு இஸ்லாம் முழங்கும் ஒற்றுமையை உலகுக்கு உணர்த்துகின்றது.

*அடுத்த இதழில் முடியும்.. வல்ல இறைவன் நாடினால்..!*



இளைஞர் சிறப்பிதழ்

வரலாறு

# இலட்சிய இளைய சமூகம்....

# சமுதாயத்தின் இணையில்லாப் பொக்கிஷம்

எழுத்து



சௌந்தர்யம்

இலட்சிய உள்ளீடுகளைக் கொண்ட இளைஞர் சமூகம் ஒரு சமுதாயத்தின் ஈடு இணையற்ற வளமாகும். அவர்களின் செயற்களங்கள் சமூகத்திட்டங்களை திறம்படச் செயல்படுத்துவதுடன் அச்சமூகத்தை அறிவுப் புஷ்பங்களால் புளங்காகிதம் அடையச் செய்யும். இன்றைய விஞ்ஞான யுகத்தில் வாழ்க்கை வரைபடத்தை இலகுவாக வரைந்து கொண்டிருக்கின்றனர் நம் இளைய சமூகத்தினர்!

அறிவுக் கலங்கரைகள் பாரெங்கும் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் இந்நூற்றாண்டில் இன்றைய இளைஞர்கள் சிந்தனைகளின் சிகரமாக, அறிவு சிரஞ்சீவியாக, கொள்கையில் உறுதியாக, தம் எல்லா செயல்பாடுகளிலும் திகழ வேண்டும்.



அப்போதுதான் ஒரு இலட்சிய சமூகம் பரிணமிக்கும்.

இந்த வரிசையில் வரலாற்றின் மைல்கல்லாக திகழும் இளைஞர்களுடன் இணைந்த ஒரு சம்பவம் வாலிபப்பருவத்தைப் பக்குவப்படுத்தி, அவர்கள் கொண்ட கொள்கையில் உறுதிபூண்டு, சமூக நற்திருப்புமுனைக்கு வழியமைக்கக்கூடியது எனில், அது மிகையல்ல! அவரகள் வனப்புமிகு வாழ்க்கையில் வளம் காணாது இறைக்கொள்கையின் இனிமையில் உறுதி கண்டார்கள். வாழ்க்கையின் நோக்கத்தில் வெற்றி பெற்றார்கள்.

ஆம், அவர்கள்தாம் குகை வாசிகள்! திருக்குர்ஆனின் 18வது அத்தியாயம் கஹ்.்ப் -குகை -இல் இச்சம்பவம் வரையப்பட்டுள்ளது. இந்த அத்தியாயத்தின் கருத்தை ஆழ்ந்து கவனியுங்கள். ஓர் உண்மை புலப்படும். அநீதியும் அட்டூழியங்களும், முஸ்லிம்களுக்கெதிரான வன்மைகளும், ஏகத்துவத்தை ஏற்றோருக்கான கொடுமைகளும் மேலோங்கிக் காணப்பட்டிருந்தது அப்போதைய ரோமானியப் பேரரசில்! அப்பேரரசின் குடிமக்களாக இருந்தனர் ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்ட சில அஞ்சாநெஞ்ச வாலிபர்கள். ஏகத்துவத்தை எதிர்த்து சிலைவணக்கத்தில் ஈடுபடுமாறு மன்னன் அம்மக்களை பெரிதும் துன்புறுத்தினான். கொலையும்கூட செய்வதற்கு அவன் தயங்கவில்லை. ஆனால் மன்னன் காட்டிய மரத்துப் போன வழிபாட்டில் கிஞ்சிற்றும் நம்பிக்கையற்ற அந்த வாலிபர்கள் மன்னனை நிராகரித்தனர். சுகபோகங்களைப் படைத்தவனுக்காக தியாகம் செய்தனர். சத்திய வழியைத் தேடி, தாம் படைக்கப்பட்ட இலட்சிய நோக்கத்தை நாடிப் புறப்பட்டனர்.

வல்ல அல்லாஹ் தன் வேதத்தில் அவர்களின் தீரத்தை திருப்தியுற தீட்டுகின்றான்:-

*இளைஞர்கள் சிலர் குகையில் தஞ்சம் புகுந்தபோது இறைஞ்சினார்கள்: 'எங்கள் இறைவனே! உன்னுடைய தனிப்பட்ட அருளை எங்களுக்கு வழங்குவாயாக! எங்கள் செயல்களை ஒழுங்குபடுத்தித் தருவாயாக! அப்போது நாம் அவர்களை அதே குகையில் பல்லாண்டுகள் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தினோம். பிறகு அவர்களை எழச் செய்தோம்.அவர்கள் இரு பிரிவினரில் யார் தாங்கள் தங்கியிருந்த காலத்தை மிகச் சரியாகக் கணக்கிடுகின்றார்கள் என்பதை நாம் அறிந்துகொள்வதற்காக! அவர்களின் உண்மையான சரிதையை நாம் உமக்கு எடுத்துரைக்கின்றோம். திண்ணமாக, அவர்கள் தம் இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருந்த இளைஞர்களாவர். நாம் அவர்களை நேர்வழியில் மேலும், மேலும் முன்னேறச் செய்தோம்.(18:9-13)*

மன்னனை மறுத்து ஏக இறைமதகு ஏறிய அந்த இளம்புஜங்கள், களைப்பு நீங்க குகையில் தஞ்சம் புகுந்த பின் அல்லாஹ் அவர்களுக்கு ஆழ்ந்த உறக்கத்தை அருளினான். வல்ல இறைவன் தன் வல்லமையையும், அற்புதங்களையும் தன் நல்லடியார்கள் சிந்திப்பதற்காக வேண்டி உலகிற்கு எடுத்துக் காட்டுவதுண்டு.

அவ்வகையில் அவ் விளைஞர்களையும் இவ்வுலகிற்குப் படிப்பினையாகக் காட்டுவதற்காக அவர்களை முன்னூற்றி ஒன்பது வருடங்கள் உறங்க வைத்தான். பின் உறக்கத்திலிருந்து விழித்த அவர்களில் ஒருவர் உணவு வாங்கி வர ஊருக்குள் சென்றபோது, உலகமே மாறிவிட்டிருந்தது. சிலைவணக்கம் புரிந்த ரோமப்பேரரசு கிறிஸ்தவ நாடாகி விட்டிருந்தது. மொழி, பண்பாடு, நாகரிகம், உடை ஆகிய அனைத்திலும் வித்தியாசங்கள் நிறைந்து காணப்பட்டது. தம்மிடம் இருந்த பண்டைய நாணயத்தை கடைக்காரரிடம் கொடுத்தபோது அவர் ஆச்சரியத்தில் விழித்தார். தம் ஆச்சரியத்தை ஊராருக்குத் தெரியப்படுத்தினார். பின் அரசு அதிகாரிகளுடன் சேர்ந்து ஊர் மக்களும் குகையை நோக்கிச் சென்றனர். தாம் நீண்ட நித்திரையின் பின் விழித்துள்ளோம் என்பதை அறிந்து கொண்ட அவ்விளைஞர்கள் தம் கிறிஸ்தவச் சகோதரர்களுக்கு முகமன் கூறிப் படுத்துக்கொண்டனர். அக்கணமே அவர்களுடைய உயிரும் பிரிந்து விட்டது.

கடந்த 3 நூற்றாண்டுகளுக்கு முன் தாம் கொண்ட கொள்கையில் உறுதி பூண்டு, தம் ஊரை விட்டுச் சென்ற சில வாலிபர்களே அவர்கள் என்பதை உலகம் அடையாளம் கண்டது. இவர்கள் தம் சத்தியப் பாதையைத் தேர்ந்தெடுத்த இலட்சிய இளைஞர்கள். நிரந்தரமற்ற இவ்வுலக வாழ்வின் சுகபோகங்களை கணப்பொழுதில் தியாகம் செய்த திடகாத்திர திண்மைப் புஜங்கள்.

ஆம்! பாருங்கள்...உலக வாழ்வின் இலட்சியங்களுக்காக தியாகம் குறித்து கவலைப்படாது கரன்சிகளில் கனவுகளைக் காக்கும் இன்றைய இளைஞர்கள் எங்கே? அரண்மனை மன்னனுக்கு மாய்ந்து போகாது, மாசுமறுவமற்ற மாமன்னனான இறைவனுக்காக குகையில் தம் வாழ்வை சுருக்கிக்கொண்ட தீரமான அந்த இளைஞர்கள் எங்கே,? சத்தியத்தை ஏற்ற நித்திய கொள்கை கொண்ட இவர்களை முன்மாதிரிப் புருஷர்களாக்கி எம் வாழ்வை பவித்திரப்படுத்துவோம். ■




# இளவயதில் சாதனைகள்... சரித்திரத்தின் கல்வெட்டுக்கள்..!!

இளமையில் இயலாமையை இல்லாதொழித்ததால் சரித்திரத்தில் இவர்கள் நாமங்கள் கல்வெட்டுக்கள். முன்னேற்றங்களை தியாகத்தில் திணித்து, இறுதிவரை இலட்சிய செங்கம்பளத்தில் நடை பயின்று, இற்றை வரை இவர்கள் பாரின் பல திக்குகளிலும் ஒலித்துக்கொண்டிருக்கின்றனர் இளமையை இலங்கச் செய்ததினால்..!

## மாவீரன் அலீ இப்னு அபூதாலிப் (ரலி)

(கி.பி.599-661)

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை தமது சிறுவயதிலேயே மறுப்பின்றி ஏற்று, இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக இஸ்லாத்தை ஏற்ற சிறுவன் என்ற பெருமை பெற்றவர். இளைய வயது முதலே அஞ்சா நெஞ்சமும், உறுதியும் படைத்த இவர் இஸ்லாமிய ஆட்சியின் நான்காவது கலீபா-ஆட்சியாளர் ஆவார்.



## தாமஸ் ஆல்வா எடிஸன்

(கி.பி.1847-1931)

ஏறக்குறைய 1093 கண்டுபிடிப்பு வகைகளுக்கான காப்புரிமைகளைத் தனது பெயரில் பெற்றிருக்கும் இவர், அத்தியாவசிய அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பலவற்றைத் தந்தவர். தொழில்ரீதியான ஆய்வுப் பரிசோதனைக் கூடத்தை முதன் முதலாக அமைப்பதற்கான முன்னோட்டத்தை இவரது கண்டுபிடிப்புக்கள் ஏற்படுத்தித் தந்தன.




## மருத்துவ மாமேதை இப்னு ஸீனா

மருத்துவ உலகின் முடிசூடா மாமன்னன் இவர். தமது 20-ஆம் வயதிலேயே பிறந்த இடத்தை விட்டு அசன்று 'அல்-கானூன் ஃபித் திப் எனும் நூலை எழுதினார். இன்றுவரையிலும் இந்நூல் உலகம் இதுவரை காணாத மருத்துவ விஷயங்களைப் பேசும் அரிய பொக்கிஷமாகப் போற்றப்படுகின்றது. பக்கவிளைவுகள் குறித்து பக்கம் பக்கமாக இன்றைய உலகம் பேசினாலும் மருந்துகளும் நோயாளிகளின் மீதான தாக்கமும் குறித்து அன்றே அவர் ஆழ்ந்த அறிவைப் பெற்றிருந்தார். இதுதவிர சூழல் மாசுபாடும் மனித உடலின் மீதான அதன் பயங்கர தாக்கமும் குறித்து அன்றே பேசிவிட்டார் இந்த மருத்துவ மாமேதை!

## ஐஸக் நியூட்டன்

(கி.பி.1643-1727)



இயற்பியலாளர், கணிதமேதை, வானவியலாளர், தத்துவஞானி என்று பல முகங்கள் கொண்ட இந்த அறிவியலாளர் புவிஈர்ப்பு விசை மற்றும் இடப்பெயர்ச்சி பற்றிய மூன்று விதிகள் குறித்து முக்கிய கண்டுபிடிப்புக்களைக் கூறியவர் நுண்கணிதமுறையை (Calculus) வளர்த்த பெருமையை மற்றொரு கணிதமேதையுடன் பங்கிட்டுக் கொண்டார்.

## முஸ்அப் பின் உமைர்

இவருடைய அழகுக்கும் செல்வச் செழிப்புக்கும் வியப்படைந்து மூக்கில் விரல் வைக்காதவரே இல்லை எனலாம். சத்தியநெறியை ஏற்ற பின்னர் அவர் அடைந்த துன்பங்களுக்கு அளவே இல்லை.இஸ்லாத்துக்காக, தம் செல்வவளங்களைத் துச்சமெனத் துறந்து சத்தியத்துக்கான உஹத் போரில் வீரமரணம் அடைந்தவர்.அண்ணலார் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தைப் பரப்ப சென்ற முதல் அழைப்புப்பணித் தூதுவர் எனும் சிறப்புக்குரியவர்.

## காலித் இப்னு வலீத் (கி.பி.592-642)

அல்லாஹ்வின் போர்வாள் - எனும் சிறப்புப் பட்டத்தை ஏந்திய இந்த மாவீரர், உஹதுப் போர் வரை இஸ்லாத்தின் கடும் பகைவராக விளங்கியவர். ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பின்னர், இஸ்லாத்தை ஏற்ற இந்த மாவீரன், அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின்னர் இஸ்லாமிய ஆட்சியாளர் அபூபக்கர் அவர்களின் மதீனத்துப் படைகளுக்காகப் பெரும் வெற்றிகளைப் பெற்றுத் தந்தார். இஸ்லாமிய வரலாற்றில் பெருவெற்றிகளுக்குப் பின்புலமாக காலித் அவர்களின் புஜங்கள் இருந்தன எனில் அது மிகையல்ல!

## கல்பனா சாவ்லா

(கி.பி.1961-2003)

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தை சேர்ந்த இந்த விண்ணாய்வு விஞ்ஞானி அமரிக்காவின் நாசா ஆய்வு மையத்தின் மூலம் 2003-இல் கொலம்பியா விண்வெளிக்கலம் மூலம் விண்வெளிப்பயணம் சென்று விபத்தில் மரணமடைந்தவர். தனது 27-ஆவது வயதிலேயே விண்ணாய்வு பொறியியற் துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர்



-எம்



இளைஞர் சிறப்பிதழ்

ஆளுமை

# இளமையின் வசந்தம்!



எழுத்து



முஹம்மத் ஜாபிர்

குதூகலிக்கும் குழந்தை பருவத்துக்கு விடை கொடுத்துவிட்டு துள்ளும் புதிய துள்ளல் பருவத்துக்கு கதவு திறக்கும் அழகிய பூங்கோட்டை அது!

இதுதான் சரி-தவறு என்பதை நடுநிலைத்தராசில் எடை போடாது கவர்ச்சியின்பால் கணநேரத்தில் சாய்ந்துவிடும் பருவம் அது.

இத்தகைய இளமைப்பருவம் இன்று எந்நிலையில் இருக்கின்றது?

நன்மை எது? தீமை எது? என்று பகுத்துணரும் அறிவுச்சுரங்கத்தை இறைவன் நமக்கு வழங்கியிருக்கின்றான். ஆனால், சிலரோ தோல்வி மற்றும் சோகமயமான எதிர்மறையான விளைவுகள் தரும் தீய எண்ணங்களுக்கே முன்னுரிமை தருகின்றார்கள்.

நன்மையையே நாடுங்கள். எதை நீங்கள் அடைய விரும்புகிறீர்களோ அதை நீங்கள் ஆழமாக விரும்புங்கள். அப்போது ஏற்படும் சக்தியே உங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச்செல்லும். அதை அடிக்கடி உங்கள் மனதில் தினமும் தியானியுங்கள். உற்சாகமான இந்த புதிய சிந்தனையே உங்கள் மனதில் இருக்கும். எதிர்மறையான எண்ணங்களை விரட்டியடிக்கும். எதை அடைய விரும்புகிறீர்களோ அதை அடைய வேண்டும் என்ற எண்ணம் தீவிரம் அடையும்போது அதை அடைவது எளிதாகின்றது.

*ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் 'ஈமான் - இறைநம்பிக்கை என்றால் என்ன?' என்று வினவினார். அண்ணலார் (ஸல்) விடையளித்தார்கள்: ஒரு நற்செயல் உனக்கு மகிழ்ச்சி அளித்து, தீய செயல் உம்மைத் துக்கத்தில் ஆழ்த்தினால் அப்பொழுது நீர் ஈமான் - இறைநம்பிக்கை உடையவர் ஆவீர் அதற்கு வந்தவர் கேட்டார்:"இறைத்தூதரே! பாவம் என்றால் என்ன? எது உனது உள்ளத்தை உறுத்துகிறதோ அதை விட்டு விடு!*

*(அறிவிப்பாளர்: அபூ உமாமா(ரலி) நூல் : அஹ்மத்.)*

நல்ல நண்பர்களுடன் பழகுங்கள். அவர்களுடன் நல்ல விஷயங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள். தனிமையை விட்டு தூரமாக இருக்க முயற்சி செய்யுங்கள். தனிமையாக இருந்தால் நமக்குள் ஷைத்தான் குடிபுகுந்துவிடுவான். இலட்சியம் எது என்று முடிவு செய்த பின்னர் அதை அடைவது குறித்த உங்கள் செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள். உங்கள், தகுதி திறமை என்ன என்பதையும் உங்கள் இலட்சியத்தை அடைய அது எந்த அளவுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

உங்களது திறமையை நீங்கள் புதைத்து விட வேண்டாம். அல்லாஹ் நம் எல்லோருக்கும் ஏதேனும் ஒரு திறமையினை கொடுத்து இருப்பான். அதனை நமக்குள் மறைத்து வைத்துக்கொண்டால் அதுவே திறன் இல்லாமல் மறைந்தும் மறந்தும் போய்விடும். திறமையை குறைத்து மதிப்பீடு செய்து கொண்டு வெற்றி இலக்கை தவறவிடுவதும் கூடாது. தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று ஆழம் தெரியாமல் காலை விட்டு தோல்விகளை சந்திக்கவும் கூடாது. ஆகவே இறைவன் அருளிய பகுத்தறிவைக் கொண்டு சிந்தித்து செயற்பட வேண்டும். சில நேரங்களில் ஆகுமான செயல்கள் கூட ஹராமான-விலக்கப்பட்ட செயல்களுக்கு காரணமாகி விடுகின்றன. இதனால் இறை நம்பிக்கையாளர்களுக்கு முன்னால் ஆகும் எனும் அம்சம் மட்டுமே இருக்கக்கூடாது. மாறாக ஆகுமான செயல் தப்பித்தவறி விலக்கப்பட்ட செயல்களுக்கு காரணமாகிவிடக்கூடுமோ என்ற அச்சத்துடன் அவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

திருக்குர்ஆனும், பெருமானார் (ஸல்) அவர்களும் கற்றுத் தந்த ஒழுக்கத்தை நீங்கள் பின்பற்றுங்கள். உங்களது அறிவாற்றலை உலகின் சிந்தனையைக் கவர்கின்ற அளவிற்கு எடுத்தியம்புங்கள்.

எனவே, வாழ்க்கையினை தீர்மானிப்பது என்பது நம்முடைய சிந்தனையே தவிர வேறில்லை. அதாவது பகுத்தறிவுத்துணை கொண்டு தீர ஆராய்ந்து முடிவு எடுங்கள். இன்றைய மதியே நாளைய விதியாகும். இன்று முதல் சரியாக சிந்தித்து செயல்பட துவங்கிவிட்டால் நாளை என்பது இன்று என்பதின் துவக்கமே.

*விசுவாசங்கொண்டோரே! நீங்கள் தைரியத்தையும் இழந்து விட வேண்டாம். கவலையும் பட வேண்டாம். (உண்மையாகவே) நீங்கள் விசுவாங் கொண்டவர்களாக இருந்தால், நீங்கள் தாம் மிக்க மேலானவர்கள்.*
*திருக்குர்ஆன் 3:139*



அழைப்பு

# இளமையின் பங்களிப்பு, அழைப்பின் உயிர்த்துடிப்பு!

இளைய சமூகம்..... நினைத்ததை முடிக்கும் ஒரு மாபெரும் கடோத்ஜக வலிமை கொண்டது அது! நன்மை-தீமை இரண்டின்பாலும் சாயக்கூடிய அம்சங்கள் நிரம்பியிருந்தாலும், நன்மையின்பால் அவர்கள் தமது ஆற்றலை செலுத்தும்பொது கிடைக்கும் பலாபலன்கள் அவர்களுக்கு மட்டுமல்ல..., முழு உலகுக்கும் கிட்டுகின்றது. வரலாறு இதற்கு சாட்சி!



இஸ்லாமிய வரலாற்றின் சங்கைமிகு சம்பவங்களும் இதற்கு உரம் சேர்ப்பவை!

அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய இறைத்தூதுத்துவத்தின் ஆரம்பகட்டநிலை அது! அண்ணலார் (ஸல்) அவர்கள் மக்களை இஸ்லாத்தின்பால் அழைத்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு சொல்லொண்ணா துயரத்தை தந்தவர்கள் அபூஜஹ்ல், அபூலஹப் ஆகியோர்! இவர்கள் ஒதுங்கி நிற்க, அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு உற்ற பக்கபலமாக நின்றவர்கள் அலி, உஸ்மான், முஸ்அப் போன்ற இளைஞர்களே!

உண்மையில் அண்ணலார் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய அழைப்புப்பணியை எடுத்துச் சென்றுகொண்டிருக்கம்போது, அதற்காகப் போராடுவதிலும், அதனைப் பாதுகாப்பதிலும் ஆகிய அனைத்துவகை இஸ்லாமியப் பணிகளிலும் இளைஞர்களுக்கே பெரும் பங்கு இருந்தது.

ஆனால், இன்றைய நிலை என்ன?

இஸ்லாமிய கோட்பாடுகளும் அதனைப் பின்பற்றுகின்றவர்களும் பிற்போக்குவாதிகள் - ஆவார்கள் - கடந்த காலத்தைப் பற்றியே சிந்திப்பவர்கள் - நிகழ்கால நடைமுறைகளைப் பற்றியோ அல்லது வருங்காலத் திட்டங்களைப் பற்றியோ எண்ணுபவர்கள் அல்லர் எனும் தப்பபிப்ராயம் அவர்களிடம் நிலவுகின்றது. இத்தகையதொரு மோசமானதொரு மனப்பதிவு இளைஞர்களிடத்தில் நிலவுவதற்கு ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பது மறுக்க மடியாத உண்மை!

ஆனால், பாருங்கள இஸ்லாம் எப்போதும் இளைஞர்களுக்கு விடுக்கும் அழைப்போ, எதிர்காலத்தை உறுதியாகக் கட்டியெழுப்பும் மாபெரும் ஆக்கபூர்வ சித்தாந்தத்தின் பக்கமே!

இஸ்லாமிய அறிஞர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையில் திரையாக நிற்கும் மாபெரும் இடைவெளியே பின்னடைவிற்குக் காரணம் என்று கூறலாம். இந்த இடைவெளி குறைய குறையவே இஸ்லாம் குறித்த சரியான கண்ணோட்டம் இளைஞர் உள்ளத்தில் ஆழப்பதிய முடியும். முஸ்லிம் இளைஞர்களும் இஸ்லாமிய வாழ்க்கைநெறி மூலமே தாம் தலைநிமிர்ந்து வாழ முடியும் என்பதை உணர முடியும்.

அனைத்துக்கும் மேலாக திருக் குர்ஆனின் பெரும்பாலான ஏவல்கள் இளைஞர்களை நோக்கியதுதான்! திருக் குர்ஆன் அத்தியாயம் 18-இல் பேசப்படும் தீரமிக்க குகைவாசிகள் இளைஞர்களே! அதேபோல், இன்னபிற அத்தியாயங்கள் கூறும் அரசனை எதிர்த்த அஞ்சாநெஞ்சன், குறுகிய காலத்தில் இறையச்சத்தால் அரசு கருவூலத்துக்கே அதிகாரியானவர் இன்னும் பலர் இளைஞர்களே.. ஏகத்துவத்தின் நிழலில் தம் ஆளுமைக்குக் கட்டியம் கூறிய நாயகர்களே!

அதேபோல், அண்ணலார் (ஸல்) அவர்கள் காலத்துக்குப் பின்னரும் இஸ்லாத்தைப் பரப்புவதில் தமது வாழ்வை அர்ப்பணித்த பல இளைஞர்களை வரலாறு கண்டிருக்கின்றது. உதாரணமாக இந்தியாவை ஆண்ட முஹம்மத் பின் காஸிம், ஸ்பெயினில் கால் பதித்த தாரிக் பின் ஸியாத் போன்ற இளைஞர்கள்!

இன்றைய இளைஞர்கள் இத்தகைய வெற்றியை ஈட்ட முடியுமா? ஆம், முடியும்... வெற்றிக்குரிய மாபெரும் வழிமுறையாக திருக் குர்ஆன் கூறுகின்றது:-

*காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் உண்மையில் நஷ்டத்தில் இருக்கின்றான். ஆனால், எவர்கள் இறைநம்பிக்கை கொண்டும், நற்செயல்கள் புரிந்துகொண்டும் மேலும், ஒருவருக்கொருவர் சத்தியத்தை எடுத்துரைத்தும் பொறுமையை கடைப்பிடிக்குமாறு அறிவுரை கூறிக்கொண்டும் இருந்தார்களோ அவர்களைத் தவிர!*

கயவர்களின் கயமையும், சூழ்ச்சிக்காரர்களின் சூதும் இஸ்லாமிய அதிகாரங்கள், கவுரவம் ஆகியவற்றை மதிப்பிழக்க வைத்தது போன்ற மாயை இன்று உருவாகிவிட்டிருக்கின்றது. இதனை தகர்க்கச் செய்து இஸ்லாத்தை தலைநிமிரச் செய்யும் மாபெரும் பொறுப்பு இளைஞர்களிடத்தில் இருக்கின்றது. இஸ்லாத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்ட இளைஞர்களே இதனை சாதிக்க முடியும்.

நற்செயல்களுடன் சமூகத்தைப் பொருத்தக்கூடிய திட்டமிடல்கள் இந்த பணியை செவ்வனே செய்ய முடியும். மோசடிகளைக் கைவிட்ட அறிவை அணிகலனாக ஆக்கிக் கொள்ள வேண்டும் இறைக்கோட்பாட்டை மேலோங்கச் செய்யும் பண்புகளை இரத்தினகற்களாக இளைஞர்கள் திகழ வேண்டும். ■

எழுத்து



முஹம்மத் முனீர் முஜ.்.ப்.்.பர்

# அறிவுக் குறுக்கெழுத்து-4

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ற் | 3 | 4 | ■ | ■ | ■ | 8 ○ | 9 | 10 |
| | ■ | ல | ■ | 15 | மி | | | ■ | |
| 21 | | 23 | ■ | | ■ | | 28 | 29 | 30 |
| 31 | ■ | ○ | | 35 | ■ | ■ | | 39 தா | ■ |
| ■ | 42 | | | ன | ■ | ■ | ■ | 49 | ■ |
| 51 | | 53 | ன் | ○ | ■ | 57 | 58 | 59 | 60 |
| 61 | ல் | ■ | ■ | 65 | ■ | | 68 | ■ | |
| | ■ | 73 | 74 | ■ | 76 கா | ○ | | ■ | 80 |

## பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்!

### விதிமுறைகள்

1. இக்குறுக்கெழுத்துப் போட்டியின் பெரும்பாலான வினாக்களுக்குரிய விடைகளை“வசந்தம்” -ஜுலை 2008 இதழிலிருந்து பெறமுடியும்.
2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்!
3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை!
4. பெயர், தொலைபேசி,எண்,குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. வெற்றியாளர்கள் 3 பேருக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.
7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது
8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 2400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது amusavir@gmail.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles - மினா பஜார்,மிர்காப் -SEEMATY, மிர்காப் - Peoples Restaurant,மிர்காப்--Careem Lanka,மிர்காப் -Abraar-al-Deerah,Studio SriLanka,மிர்காப் - IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளை
9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 20.09.2008
10. வெற்றி பெற்றோர் விவரங்கள் அக்டோபர் இதழில் வெளியாகும். இறைவன் நாடினால்..!

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள், எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்!

### இடமிருந்து வலம்.

1.சிலையை இப்படியும் கூறுவார்கள்(4) 8.மென்மையை குறிக்கும் ஒரு சொல் (3) 15. இன்றைய வன்மைகளுக்குப் பயன்படுத்தப்படும் இது எது ஒன்றையும் உடனே அரித்துவிடக்கூடிய வேதிப்பொருள் (4) 21. வாழ்க்கைத்துணைவி (3) 28.எடையறியப் பயன்படுவது .(3) 42.ஒருவகை இறைவழிபாடு (குழம்பியுள்ளது) (4) 51. ஊழல்களை விசாரிக்க இதனை அமைப்பர் (4) 57.மலையின் உச்சி இது! (குழம்பியுள்ளது) (4) 61. கீழ் என்பதன் எதிர்ப்பதம் (2)73.காய் பழுத்தால் கிடைப்பது (2) 76.அடிபட்டால் உண்டாவது (3)

### வலமிருந்து இடம்.

23.இது ஒவ்வொன்றுக்கும் எதிர்வினை உண்டு (2) 28.நாம் நடை போடும் பூமித்தளம் (2) 35.இதன் 12 ஒரு வருடமாகும். குழம்பியுள்ளது (3)

### மேலிருந்து கீழ்

1.கஷ்டத்தைக் குறிக்கும் (4) 3.வெவ்வேறானவற்றை இப்படி குறிப்பிடலாம் (5) 8.இது சீர்கெடின் முழு உடலும் சீர்கெடும்(4) 15.மானத்துக்குப் பங்கம் உண்டானால் அது... (5) 39. ஒருவகை நாட்டுப்புற இசை (3) 42.ஒட்டகம் தனது உணவை இங்குதான் சேமிக்கின்றது.(3) 57.பெரிய என்பதன் எதிர்ப்பதம் (3) 60. வெண்மை அல்ல! (3) 61.இது கருக்கொண்டால் மனிதர் மழையைப் பெற்றுக்கொள்வர். (3) 68. நெஞ்சில் இருக்கும் தைரியத்தைக் குறிக்கும் பயிர்கள் வளர போடுவதுண்டு. குழம்பியுள்ளது (3)

### கீழிருந்து மேல்

30. நலம் என்பதன் வேறு சொல் (3) 39. ஒருவகைப் பறவை(2) 65. வெடிகுண்டைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்(2

*அனைத்து விடைகளையும் நிரப்பிய பின்னர் வட்டமிட்ட சொற்களை ஒழுங்குபடுத்தினால் உயிர் துடித்துக் கொண்டிருக்கும் நான்கெழுத்து சொல் வரும்!*

☐ ☐ ☐ ☐

*பெயர்:*

*குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்*

Civil ID OR Passport No:

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

*தொலைபேசி:*

*குவைத்தில் வசிக்கும் இடம்:*

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 20.09.2008


அழகு விளக்காய்
உங்களுக்கு அறிவொளி -தந்து
உங்கள் அறிவினை ஒளிர்படுத்தும்
வசந்தம்...செப்டம்பர் '08 -
புனித ரமளான் சிறப்பிதழ்
முதல் தன்
படைப்புக்களை நவீனமாக தந்து...
வசந்த கிளை நிறைய அறிவுக்கனிகள்..!
உங்களை ஆட்கொள்ளும்.. அழகு படைப்புக்கள்...!
உங்கள் வசந்த சோலையில்..
இவைகளும் இனிமேல், இனிதே
தென்றலாய் வீசும்..!
வனிதையர் பக்கமாக...
இன்றைய சரித்திரப் படைப்புக்களில் சகலதிலும்.. பெண்ணவள்... பொன்னாய்.. உள்ளாள்..!
மழலையர் சோலையாக...
இன்றைய குழந்தைகள்... நாளைய நல்தலைமுறைகள்... சமுதாயத்தில்....
சுற்றத்துச் செய்திகளாக...
இன்றைய நாழிகைத் துளிகள்.. நடப்புக்கள்.. செய்திகளாக...!
புதிய இத்யாதிப் படைப்புக்களாக..!
- பொது அறிவுத் தடங்கள் - கவித்தூறல்கள்
- வேலைவாய்ப்புச் செய்திகள் - மாதம் ஒரு நாடு


ஒரு சிறிய பறவை பல மைல்கள் பறந்து
தனது இடத்தை அடைய முடியுமானால்...
உங்களாலும் முடியும்!
வசந்தம்
IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
... رحمة للعالمين
Extn: 208 2444117
www.ipc-kw.com